விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 10 திங்கட்கிழமை (25.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

# நாட்டை காட்டிக் கொடுப்பதாக என்னைக்குறை கூறுகின்றனர்



## புதிய அரசியல் யாப்பிலும் விமர்சனம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை

(வரக்காபொல)

புதிய அரசியலமைப்பு தயாரிக்கும் குழுவில் உள்ளவர்களே புதிய அரசியல் யாப்பு தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் சர்வதேசத்தை வெற்றி கொள்கின்ற சந்தர்ப்பங்களில் சிலர் தன்னை நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் குறை கூறுகின்றனர் என கவலை வெளியிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ், வைத்தியரின் கவனவீனமே குடும்பஸ்தர் உயிரிழக்கக் காரணம்

### மரண விசாரணையில் உறவினர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழக்க பொலிஸார் மற்றும் வைத்தியர் ஒருவரின் கவனவீனமே காரணம் என மரண விசாரணையின் போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணுவில் தியேட்டர் ஒழுங்கையை சேர்ந்த இளையதம்பி செல்வராசா (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 22 ஆம் திகதி இணுவில்

24ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் மாணவர்கள் மீது பாயும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலைப் பயன்படுத்தி, தமிழ் மாணவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திணித்து அவர்களை ஒடுக்கும் சதித் திட்டமொன்று அரங்கேற்றப்பட்டு வருவதாக நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

தென்பகுதியைச் சேர்ந்த இனவாதிகளின் இந்த முயற்சிக்கு அரசாங்கம் துணை போனால் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்

24ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டு எதிரணி ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் விஷேட சந்திப்பு ஒன்று இடம்பெற உள்ளதாக தெரிய வந்துள்ளது.

இன்று ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற உள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல்வாதிகளை தண்டிப்பது அரசியல் பழிவாங்கலாகாது

## பிரதமர் ரணில் விளக்கம்

(கொழும்பு)

ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதானது அரசியல் பழிவாங்கல் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நல்லாட்சியில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் காணப்படுவதாகவும இங்கு அரசியல் பழிவாங்கல்களை

24ஆம் பக்கம் பார்க்க....

## எரிபொருள் இறக்கும் நடவடிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருள் விநியோக குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக ஈரானில் இருந்து கொண்டு வரப்பட்ட 90 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருள் இறக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் எரிபொருள் விநியோக குழாயில்

24ஆம் பக்கம் பார்க்க....

## கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் மீன்பிடி இறங்குதுறை வேண்டாம்!

### ஆலய முன்றலில் நேற்று கவனயீர்ப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
தமிழ் பகுதி-I, II

உள்ளே...

## ஜென்மம் முடியும்வரை முயன்றாலும் ஜே.வி.பியினால் ஆட்சியமைக்க முடியாது

### பந்துல எம்.பி ஏளனப் பேச்சு



(கொழும்பு)

வாழ்க்கையின் இந்த ஜென்மம முடியும் வரை முயன்றாலும் மக்கள் விடுதலை முன்னணியினால் தனித்து அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாணந்துறை வாத்துவ தல்பிட்டிய ஹோட்டலில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

2020 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியமைக்கும் என அதன் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்ட பந்துல குணவர்தன, மக்கள் விடுதலை முன்னணியை ஏளனம் செய்து பேசியுள்ளார்.

மக்கள். விடுதலை முன்னணி

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலையின் சில பீடங்கள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவ வணிக பீடத்தின் சில பிரிவுகளின் கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம தெரிவித்துள்ளார்.

அதன்படி கலை பீடத்தின முதலாம் ஆண்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ வணிக பீடத்தின் முதலாம் ஆண்டு மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களின் கல்விச் செயற்

24ஆம் பக்கம் பார்க்க....

## மினிபஸ்-மோ.சைக்கிள் விபத்து; கணவன், மனைவி பலி; குழந்தை படுகாயம்





24ஆம் பக்கம் பார்க்க....

### முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள

## 617 ஏக்கர் காணிகளைச் சுற்றி கடற்படை மண் அரண் அமைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் கடற்படையினர் சுவீகரித்துள்ள 617 ஏக்கர் காணி பகுதியில் தற்போது காணியனைச் சுற்றி மண் அரண் அமைக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வருட தொடக்கத்தில் முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கஞ்சா விற்பனை; குடும்பஸ்தர் கைது!

(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றில் வந்து கஞ்சா விற்பனை செய்ய முயன்ற குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து நான்கு பொதி கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சிறிமன் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் உள்ள புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் துறைமுகப் பகுதியில் வைத்து மணல் ஒழுங்கை பருத்தித்துறையைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தர் கைது செய்யபட்டதுடன், நான்கு கஞ்சாப் பொதிகளும் மீட்கப்பட்டன.

விற்பனைக்காக அவர் பயன்படுத்திய முச்சக்கரவண்டியும் மதுவரித் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

கைதான நபர் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்படவுள்ளார். (செ-60)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு சென்.மேரிஸ் வீதியில் 4 அறைகள், பெரிய சமையலறை, பெரிய ஹோல் உடன் பெறுமதி வாய்ந்த பெரிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு (எல்லா வசதிகளுடனும்) (C-5282)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு:
0770469822, 0776737529
0016479218502

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மகிந்தவை பதவியில் அமர்த்த சில ஊடகங்கள் முயற்சி! - ரணில்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பதவிக்குக் கொண்டு வரும் நோக்கில் சில அச்சு ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஐ.தே.க உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலத்தில், நன்மைகளை அனுபவித்த ஊடகவியலாளர்கள், அவரை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படும் ஊடகங்கள் என்று சில ஆங்கில நாளிதழ்களின் பெயர்களையும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

மங்கள சமரவீரவை வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து அகற்றுமாறு அவ் ஊடகங்கள் கோருவதுடன், அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தைச் சீரழிக்க அவை முற்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.



ஊடகங்கள் அரசாங்கத்தை விமர்சிப்பது குறித்து பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை. அதைச் செய்யுங்கள். ஆனால் முரடர்களை மீண்டும் அழைப்பதற்கு முயற்சிக்காதீர்கள்.

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அவர்கள் முயற்சித்தால், அதற்கும் நாம் தயாராகவே இருக்கிறோம்.

அவர்கள் பாதயாத்திரை போகட்டும். நாமும் தயார். வீதியில் மக்களை இறக்குவதற்கு எம்மாலும் முடியும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


## வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்டவேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புக்கு : 0771681697, 0772105322 (C-5273)

## மீண்டும் 10,00,000/= பரிசு

23.07.2016 இல் சீட்டிழுக்கப்பட்ட சுப்பர் போல் ரிக்கட் மூலம் கனகலிங்கம் திலகவதி முகவர் ஊடாக மீண்டும் பத்து லட்சம் ரூபாய் பரிசை வென்று யாழ்வாசிக்கு வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளார். இதேபோன்று கடந்த மாதம் 30ஆம் திகதி ஜயோதா ரிக்கட் மூலமும் பத்து லட்சம் ரூபாய் பரிசும், 21.07.2016 அன்று சீட்டிழுக்கப்பட்ட மகாஜனா சம்பத்தில் ஒரு லட்சம் பரிசையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. நீங்களும் இன்றே நாடுங்கள் கனகலிங்கம் திலகவதி லொத்தர் கூடுகளை. (5418)


# ஊடகங்களை பிரதமர் அச்சுறுத்துகிறார் - நாமல்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நல்லாட்சி, ஊடகத்தையும் எதிர்க்கட்சியையும் மிகவும் அச்சுறுத்துகின்றது. நாட்டை அபிவிருத்தி செய்யும் எந்தவொரு வேலைத் திட்டங்களும் தற்போதைய அரசாங்கத்திடம் இல்லை.

தற்போதைய அரசாங்கம், கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களையே உலகிற்கு காட்டிக் கொண்டிருக்கிறது. எந்த எதிர்ப்பு வந்தாலும் நடைபவனியை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாக அவர் மேலும் கூறினார். (செ-11)

# மரண அறிவித்தல்



திருமதி

## இரத்தினம் பவளம் (பெத்தம்மா)

ஆனைக்கோட்டை சாவக்கட்டை பிறப்பிடமாகவும், கொட்டடி பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பவளம் (பெத்தம்மா) அவர்கள் நேற்று (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், அருந்தவம், பாக்கியபதி (சீனா), நளினிதேவி, கிருஷ்ணமூர்த்தி, யோகேஸ்வரி (தங்கா), (இராசன்) இரத்தினசிங்கம், கிருஷ்ணகுமார் (அப்பன்), காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, கிருஷ்ணவேனன், முரளிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியாம்பிள்ளை, செல்வராசா, பரமசிவம், வசந்தி, நவரத்தினம், வெள்ளச்சி, சுதா, ராணி, காலஞ்சென்ற சிவானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2016) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு புனித அந்தோனியார் ஒழுங்கையில் உள்ள மகள் தங்காவின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புனித அந்தோனியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-5288)

## பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி குறியீட்டு இல: பொதுமுகாமையாளர் 101/11
சம்பள அளவுத்திட்டம்: 10450-100x10-110x10-12550
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
(அ) கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகாலஅனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்தவண்ணம் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமை
அல்லது
(இ கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஒரு வருட கால அனுபவம்/ க.பொ.த உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது ஒரு வருடம் சேவையாற்றிய அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

01. வயதெல்லை 18-45 வரை (கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுற்று நிருபங்களான 66/2006 இன் படியான 10% சம்பள அதிகரிப்பு 02/2015(1) இன் படியான சம்பள அதிகரிப்பு மற்றும் 15% விசேட படியும் வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
03. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
04. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
05. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.இல, பிறந்ததிகதி, தகைமைகள், அனுபவம் என்பன உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும்போது இதன் பிரதிகள் கொண்டு வருதல் வேண்டும்.
06. விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
07. விண்ணப்பங்கள் "தலைவர், பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், புலோப்பளை" எனும் முகவரிக்கு எதிர்வரும் 10/08/2016-ந் திகதி முன்னதாக கிடைக்க கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
08. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

தகவல் : தலைவர்
பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.


(சி-5287)

# வடக்கு மீள்குடியேற்ற செயலணியை எதிர்ப்போருடன் பேச்சு நடத்தத் தயார்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்துக்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள மீள்குடியேற்றச் செயலணி குறித்து குறைகூறி எதிர்க்கும் தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாராகவே உள்ளேன் என மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசாங்கம் யாழ். வலி. வடக்கில் காணிகளை விடுவித்துள்ளது. அதேபோன்று வடக்கின் ஏனைய பகுதிகளிலும் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் அவர்களது நிலங்களில் மீள்குடியேற்றி வாழ்வாதாரத்தை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் வடக்கிற்காக மீள்குடியேற்றச் செயலணியை ஸ்தாபித்துள்ளது.

தற்போது அந்த செயலணி குறித்து குறைகூறுகின்றார்கள். இச்செயலணியில் குறைபாடுகள் காணப்படுகின்றன என குறைகூறுபவர்கள் கருதுவார்களாயின் அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு தயாராகவே உள்ளேன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலோ அல்லது தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரையிலோ தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பது எமது நோக்கமல்ல. அவர்களின் எதிர்காலத்திற்காக அரசாங்கம் என்ற வகையில் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு அம்மக்களின் பிரதிநிதிகள் ஒத்துழைப்புக்களை நல்கவேண்டும் என்றார்.

முன்னதாக வடமாகாண மக்களின் மீள்குடியேற்றத்துக்காக அரசாங்கத்தினர் அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், றிசாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா ஆகியோர் அடங்கிய விசேட செயலணி உருவாக்கப்பட்டது.

இச்செயலணியில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டிருக்காத நிலையில் வடமாகாண சபையிலும், பாராளுமன்றத்திலும எதிர்ப்புத் தெரிவிக்கபட்டதோடு இச்செயலணியை மீளப பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது

மாகாண மட்டத்தில் பொலிஸ் ஆணைக்குழுக்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முழு நாட்டையும் ஒரே பொலிஸ் வலையமைப்பாக உருவாக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துணைப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குக் கீழ் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண பொலிஸ் ஆணைக்குழு உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு திருத்தம் குறித்த மக்கள் கருத்தறியும் ஆணைக்குழுவிற்கு இவ்வாறு ஆலோசனை முனவைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக்கு சட்டம் ஒழுங்கு தொடர்பில் பொலிஸார் பொறுப்புகூறும் வகையில் சட்டத் திருத்தம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

விசாரணைகள் மற்றும் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வது தொடர்பில் அரசியல் தலையீடு இன்றி சுயாதீனமாக செயற்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டத்தரணி ஒருவரை நியமிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மாகாணமட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றம், பதவி உயர்வு உள்ளிட்டனவற்றை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## மக்களின் ஒரே பாதுகாவலன் கூட்டு எதிர்க்கட்சி மட்டுமே!

(கொழும்பு)

மக்களுக்கு இருக்கும் ஒரே பாதுகாவலன் கூட்டு எதிர்க்கட்சி என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மகரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சட்ட விரோத செயற்பாடுகளை கூட்டு எதிர்க்கட்சியால் மாற்ற முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே கூட்டு எதிர்க்கட்சியின் பாத யாத்திரையில் மக்கள் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலநறுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி கண்டியில் இருந்து ஆரம்பிக்கவுள்ள பாத யாத்திரை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழப்பமடைய தேவையில்லை, இந்தப் பாதயாத்திரை அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான செயற்பாடு அல்ல எனவும் கூட்டு எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

## 43 ஆயிரத்து 929 பேர் குற்றவாளிகளாகப் பதிவு

### 973 பெண்களும் உள்ளடக்கம்

(கொழும்பு)

இலங்கையில் தற்போதுள்ள குற்றவாளிகளின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 929 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜூன் 30 வரையான பகுதியிலேயே குற்றவாளிகளின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 929 ஆக பதிவாகியுள்ளது.

அவற்றில் 973 பெண்களும் அடங்குவதாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 3 இலட்சத்து 50 ஆயிரம் குற்றவாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 22 ஆயிரத்து 937 பெண்கள் உள்ளடங்குவதாக குற்றப் புலனாய்வு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.


70 வயதிற்கு மேற்பட்டோரின் பெயர்களை குற்றவாளிப் பட்டியலில் இருந்து நீக்கி விடுவதாகவும், அத்துடன் 20 ஆண்டுகள் நன்னடத்தையுடன் காணப்படும் குற்றவாளிகளின் பெயரும் பொலிஸ் அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் மூலம் இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்படுவர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கொழும்புத் துறைமுகத்தில் ஜப்பானிய போர்க்கப்பல்கள்



ஜப்பானியக் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நேற்று கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளன. இனாசுமா, சுசுற்சுகி ஆகிய பெயர்களைக் கொண்ட ஜப்பானியப் போர்க்கப்பல்களே கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ளன.

இன்று மாலை வரை இந்தப் போர்க்கப்பல்கள் கொழும்பில் தரித்து நிற்கவுள்ளன. இதன் போது இலங்கை கடற்படையுடன் இணைந்து ஜப்பானியக் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.



ஏடன் வளைகுடாவில் சரக்குக் கப்பல்களுக்கான பாதுகாப்பில் ஈடுபடும் ஜப்பானியப் போர்க்கப்பல்கள், விநியோகத் தேவைக்காக கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடி வந்து செல்வது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வரலாறு படைத்த ரொனால்டோவுக்கு கிடைத்த புதிய கௌரவம்




யூரோ கிண்ண கால்பந்து தொடரில் போர்த்துக்கல் அணிக்கு முதன்முறையாக கிண்ணம் வென்று கொடுத்த கிறிஸ்டியானோ ரொனால்டோவை அந்நாட்டு அரசு கௌரவிக்க முடிவு செய்துள்ளது.


சமீபத்தில் நடந்து முடிந்த யூரோ கிண்ண கால்பந்து தொடரில் கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி, பிரான்ஸ் அணியை அதன் சொந்த மண்ணிலே வீழ்த்தி முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

இந்நிலையில் போர்த்துக்கல் நாட்டுக்கு பெருமை தேடித் தந்த ரொனால்டோ பெயரை விமான நிலையத்திற்கு வைத்து அவரை கௌரவிக்க போர்த்துக்கல் அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி ரொனால்டோ பிறந்த மெடைய்ரா தீவில் உள்ள விமானநிலையத்திற்கு ரொனால்டோவின் பெயர் சூட்டப்பட உள்ளது.

ஏற்கெனவே இங்கு ரொனால்டோவுக்கு வெண்கல சிலை நிறுவப்பட்டுள்ளது. தவிர, மீயூசியம், ஹோட்டல் ஆகியவற்றிற்கும் ரொனால்டோவின் பெயர்தான் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடை தாண்டலில் அசத்திய வீராங்கனை



அமெரிக்க வீராங்கனை கேந்திரா ஹரிசன் மகளிர் 110 மீற்றர் தடை தாண்டும் போட்டியில் உலக் சாதனை படைத்துள்ளார்.

மகளிர் 110மீற்றர் தடை தாண்டும் போட்டியில் பந்தய இலக்கை 12.20 நொடிகளில் கடந்து தங்கப்பதக்கம் தட்டிச் சென்றதுடன் 1988-ஆம் ஆண்டு யார்டோவா டொன்கோவா என்ற பல்கேரிய வீராங்கனை படைத்திருந்த சாதனையை முறியடித்து உலக சாதனையையும் படைத்துள்ளார்.

இந்நிலையில், 28 வயதான கேந்திரா ஹரிசன் அடுத்து ஒலிம்பிக் போட்டிக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

# முதல் டெஸ்ட் போட்டியில் முத்திரை பதித்த முகமது ஷமி



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி காயம காரணமாக கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக போட்டிகளில் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் களமிறங்கியுள்ள முகமது ஷமி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி முத்திரை பதித்துள்ளார்.

அவர் பிராவோ, சாமுவேல்ஸ், பிளாக்வுட், சந்திரிகா ஆகிய முக்கியமான வீரர்களை ஆட்டமிழக்க செய்தார்.

அவர் 3வது விக்கெட்டை வீழ்த்திய போது டெஸ்டில் 50வது விக்கெட்டை வீழ்த்தி சாதனை படைத்தார். தனது 13வது டெஸ்டில் அவர் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

இதன் மூலம் அதிவேகத்தில் 50 விக்கெட் எடுத்த 2வது இந்தியரான வெங்கடேஷ் பிரசாத்தை (13 டெஸ்ட்) முகமது ஷமி சமன் செய்துள்ளார்.

# சர்வதேச தடகளத்தில் தங்கத்துடன் உலக சாதனை படைத்த இந்திய வீரர்




சர்வதேச தடகள போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா ஈட்டி எறிதலில் தங்கம் வென்று உலக சாதனை படைத்துள்ளார்.

போலந்தில் பிட்கோசெஸ்க் நகரில் சர்வதேச தடகள சம்மேளனம் சார்பாக ஜூனியர் தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த போட்டியில் ஈட்டி எறிதல் பிரிவில் 18 வயது இந்திய வீரர் நீரஜ், 86.48 மீற்றர் ஈட்டியை வீசினார். இதற்கு முன் லாத்வியா வீரர் சிஜிஸ்முன்ட்ஸ், 84.69 மீற்றர் தூரம் வீசியதே உலக சாதனையாக இருந்தது.

முதல் முயற்சியில் 79.66 மீற்றர் தூரம் வீசிய நீரஜ் 2வது முயற்சியில்தான் இந்த உலக சாதனையை படைத்தார்.

லண்டன் ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்றுள்ள ட்ரினிடாட் டொபாக்கோ வீரர் கெசோன் வால்காட் இந்த ஆண்டில் அதிகபட்சமாக 86.35 மீட்டர்தான் வீசியது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன் ஜூனியர் தடகளப் போட்டியில் இந்தியா 2 (2003, 2014ம் ஆண்டு) வெண்கலப் பதக்கங்களை வென்றிருந்தது. தற்போது முதன்முறையாக தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

# மேற்கிந்திய தீவுகள் அணியை கிண்டலடித்த ஹர்பஜன் சிங்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், முதல் டெஸ்டில் திணறி வரும் மேற்கிந்திய தீவுகளை கிண்டல் அடித்துள்ளார்.

இந்தியா- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அண்டிகுவாவில் நடந்து வருகிறது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி முதன்முறையாக இரட்டை சதம் விளாசி சாதனை படைத்தார்.

இந்நிலையில் விராட் ஹோலியின் ஓட்டங்கள் குவிப்பை தடுக்க முடியாத மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களுக்கு ஹர்பஜன் சிங் நகைச்சுவையாக ஆலோசனை ஒன்றை வழங்கி உள்ளார்.






இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கூறுகையில்,

விராட் ஹோலியின் ஓட்டங்கள் குவிப்பை தடுக்க ஒரு வழிதான் இருக்கிறது. அவரின் கிட்பேக்கை எடுத்து மறைத்து வைத்து விடுங்கள் என்று நகைச்சுவையாக பதிவிட்டுள்ளார்.

இந்தியா முதல் இன்னிங்சில் 566 ஓட்டங்களுக்கு டிக்ளேர் செய்தது. தொடர்ந்து முதல் இன்னிங்சை விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 243 ஓட்டங்கள் எடுத்து பொலோ- ஒன் பெற்றது.

தற்போது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி தொடர்ந்தும் துடுப்பாடி வருகின்றது.

# உலக சம்பியன்ஷிப் கார் பந்தயம் லெவிஸ் ஹமில்டன் வெற்றி

2016-ம் வருடத்தின் பார்முலா ஒன் உலக சம்பியன்ஷிப் பந்தய போட்டி 21 சுற்றுகளாக நடக்கிறது. இதுவரை 10 சுற்றுகள் முடிந்து 11-வது சுற்றான ஹங்கேரி கிராண்ட் பிரிக்ஸ நேற்று நடைபெற்றது.

வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தின் முடிவில் மெர்சிடெஸ் அணியின் நிகோ ரோஸ்பெர்க் போல் நிலையை அடைந்தார். லெவிஸ் ஹமில்டன் 2-வது இடத்தைப் பிடித்தார்.

நேற்று நடைபெற்ற ஹங்கேரி கிராண்ட் ப்ரிக்ஸில் நிகோ ரோஸ்பெர்க் முதல் இடத்தில் இருந்து புறப்பட்டார். 70 சுற்றுகளை கொண்ட 191 மைல் தூரத்தை ஹமில்டன், பந்தய தூரத்தை ஒரு மணி நேரம் 24 நமிடங்கள் 40 வினாடிகளில் கடந்து முதல் இடம் பிடித்தார். ரோஸ்பெர்க் ஒரு மணி நேரம் 24 நிமிடங்கள் 58 நிமிடங்களில் கடந்து 2-வது இடத்தை பிடித்தார்.




மொத்தமாக சம்பியனுக்கான புள்ளிகளில் இதுவரை ரோஸ்பெர்க் முதலில் இருந்தார். தற்போது ஹங்கேரி கிராண்ட் பிரிக்ஸில் வெற்றி பெற்றுள்ளதால் 192 புள்ளிகள் பெற்று ஹமில்டன் முதல் இடத்தில் உள்ளார். ரோஸ்பெர்க் 186 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தில் உள்ளார்.

# மதுவரித் திணைக்களத்தினரிடம் மாட்டியது 6கிலோ கேரள கஞ்சா

## இளைஞன் கைது



பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் உடுவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கை மூலம் 6 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் அதனை வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சிறிமன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு உடுவில் பகுதியில் கஞ்சா கைமாற்றப்படுவதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரிக்கு புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன், மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் மதன்மோகன் ஆகியோரின் வழிநடத்தலில் பொறுப்பதிகாரி சிறிமன் தலைமையில் சென்ற குழுவினர் உடுவில் சேச் பகுதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞனை கைது செய்து அவரிடமிருந்த ஆறு கிலோ கிராம் கஞ்சா பொதியினையும் மீட்டனர். (இ-60)

# மதுவால் மோதிரத்தை இழந்த குடும்பஸ்தர்!

(கரணவாய் )

மது அருந்தச் சென்றவர் ஒரு பவுண் நிறையுடைய மோதிரத்தினைப் பறி கொடுத்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி இரவு யாழ். நெல்லியடி நகர்ப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நெல்லியடி நகர்ப் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை 42, 45 வயது மதிக்கத்தக்க இருவர் வந்து சந்தித்துள்ளனர்.

தச்சு வேலை செய்யும் நபர் ஒருவரின் வீட்டினைக் காட்டுமாறு அழைத்துச் சென்று நெல்லியடியில் உள்ள மது பானசாலை ஒன்றில் மதுப் போத்தல் ஒன்றினை வாங்கி மூவரும் அருந்தியுள்ளனர்.

மதுவிற்குள் மயக்க மருந்து கொடுத்து அக் குடும்பஸ்தரை மயக்கிவிட்டு அவர் அணிந்திருந்த ஒரு பவுண் நிறையுடைய மோதிரத்தினை அபகரித்துச் சென்றுள்ளனர்.

மயக்கத்தில் இருந்தவரை அப்பகுதி மக்கள் மீட்டுப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

# பிரித்தானிய வெளிவிவகார, கொமன்வெல்த் பணியக இணை அமைச்சராக அலோக் சர்மா

(கொழும்பு)

பிரித்தானியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள தெரெசா மே, ஆசிய -பசுபிக் விவகாரங்களைக் கையாளும் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலோக் சர்மாவை நியமித்துள்ளார்.



அண்மையில் பதவி விலகிய டேவிட் கமரூன் அரசாங்கத்தில், வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சராக இருந்த, ஹியூகோஸ்வயருக்கு புதிய அரசாங்கத்தில் இடமளிக்கப்படவில்லை.

ஹியூகோ ஸ்வயர், வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சராக இருந்த போது, இலங்கை மனித உரிமை விவகாரங்களில் கூடுதல் கவ்னம் செலுத்துபவராக இருந்து வந்தார்.

இந்த நிலையில், புதிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலோக் சர்மா, ஆசிய பசுபிக் பிராந்தியம் உலகின் மிக முக்கியமான பகுதி என்றும் பிரித்தானியாவின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கு இந்தப் பகுதி முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் புதிய நண்பர்களுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்ற எண்ணியுள்ளதாகவும், வர்த்தக உறவுகள், முதலீட்டு வாய்ப்புகளை வலுப்படுத்துவது மற்றும் பிராந்தியத்தில் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தப் போவதாகவும், அலோக் சர்மா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பச்சிளம் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் வெட்டிப் படுகொலை!

## நள்ளிரவு வேளை பயங்கரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவிலுள்ள காக்காச்சி வெட்டைக் கிராமத்தில் பச்சிளங் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அக் குடும்பத்தின் தலைவனை கைது செய்துள்ளதாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காக்காச்சி வெட்டைக் கிராமத்தைச் சேர்ந்த பேரின்பம் விஜித்தா (வயது-24), பிரசாந்தன் சஸ்னிகா (வயது- 18 மாதங்கள்) மற்றும் கந்தையா பேரின்பம் (வயது- 56) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

மனைவியும் குழந்தையும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை வீட்டிற்குள் புகுந்த விஜித்தாவின் கணவரான பிரசாந்தன் (வயது-34) விஜித்தாவையும் அவரது ஒன்றரை வயதுக் குழந்தையையும் வெட்டிக் கொலை செய்து வீட்டுக் கிணற்றில் வீசியுள்ளார்.

இவ்வேளையில் அயல் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த விஜித்தாவின் தந்தையான பேரின்பம் தனது மகள் விஜித்தாவினதும் பேரக் குழந்தையான சஸ்னிகாவினதும் அவலக் குரல் கேட்டு ஓடிவந்த பொழுது கொலையாளியான மருமகனான பிரசாந்தன் மாமனாரையும் தாக்கியுள்ளார்.

வெட்டப்பட்ட விஜித்தாவின் தந்தை பேரின்பம் காயங்களோடு குற்றுயிராகக் கிடந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் முன்னதாக சேர்ப்பிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுப்பப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் ஈடுபட்டவர் அக்குடும்பத்தின் தலைவன் என்பதை ஆரம்பக் கட்ட விசாரணைகளின் மூலம் அறிந்து கொண்ட பொலிஸார் காக்காச்சிவெட்டைக் கிராமத்தில் மறைந்திருந்தபோது சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் நீண்ட நாட்களாக இருந்து வந்த குடும்பத் தகராறே இந்தப் படுகொலைக்கு மூலகாரணமாய் அமைந்துள்ளதென்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடைசியாக கடந்த வெள்ளியன்றும் (22.07.2016) கணவன்-மனைவிக்கிடையிலான முறைப்பாட்டின் அடிப்படையில் கணவன்-மனைவி ஆகியோர் அழைக்கப்பட்டு வெல்லாவெளிப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

குடும்பத் தகராறு பற்றி பொலிஸ் விசாரணையின் போது பிரசாந்தன் மனைவியிடம் தர்க்கம் புரிந்ததாக தெரியவருகிறது.

பொலிஸார், சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

# இராசி பலன்

25.07.2016
(ஆடி 10, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 8.43 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 1.58 மணிவரை
சுபநேரம் 12.02- 1.32 மணிவரை
இராகுகாலம் 7.32- 9.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மகம், பூரம் | | சூரி<br>சுக் |
| | | | குரு<br>ராகு<br>புத |
| | சனி<br>செவ் | | |

**மேடம்** தொழில் ரீதியான பயணம் பலன் தரும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள், சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், சந்தோசம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, அரசு வழியில் அனுகூலம் உண்டு.

**கடகம்** கனிவாகப் பேசிக் காரியம் சாதிக்க வேண்டிய நாள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுப்பீர்கள், பயணங்களால் பயனுண்டு, ஆன்றோர் சந்திப்பு உண்டு.

**சிம்மம்** நடப்பதெல்லாம் நமக்கே யென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பயனுண்டு, நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்** போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள், வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**விருச்சிகம்** வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நன வாகலாம், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணங்களால் பயனுண்டு.

**மகரம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆராக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில்

# கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம் பழுது

## நோயாளர்கள் கடும் அவதி

(யாழ்ப்பாணம்)

**தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையிலுள்ள கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம் உட்பட சில இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் சிகிச்சை பெறுவதற்குச் செல்லும் நோயாளர்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.**

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் 200 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாளாந்தம் 50 தொடக்கம் 100 வரையான நோயாளர்கள் பரிசோதனைகளுக்காக செல்கின்றனர்.

இந்தநிலையில் கடந்த 15 நாட்களாக கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம் பழுதடைந்த நிலையிலுள்ள காரணத்தால் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

குறித்த இயந்திரம் அடிக்கடி பழுதடைவதாகவும் தொடர்ச்சியாக நோயாளர்களுக்கான சிகிச்சைகள் இடைநிறுத்தப்படுகின்றன.

அத்துடன் புற்றுநோயாளர்களுக்கான மருந்து கலக்கும் இயந்திரம் (ஹீமோத்தெரபி) கடந்த 5 நாட்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் அடுத்த நாள் வருமாறு கூறி அனுப்பப்படுகிறார்கள். இதனால் நோயாளிகள் ஒவ்வொரு நாளும் வைத்தியசாலைக்கு சென்று திரும்பிச் செல்கின்றனர். புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சை இடையில் நிறுத்தப்படுமிடத்து அது நோயாளர்களுக்கு பாரிய விளைவை ஏற்படுத்தும் எனவும் நோயாளர்கள் அச்சம் தெரிவித் துள்ளனர்.

மேலும் குறித்த வைத்தியசாலையில் நிரந்தரமான நிர்வாக அதிகாரி இதுவரை நியமிக்கப்படவில்லை என்றும் இவ்வாறான இயந்திரப் பழுதுகள் அடிக்கடி இடம்பெற்ற வண்ணம் இருப்பதாகவும் அவை சீர் செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். குறித்த விடயம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமாரை தொடர்பு கொண்டு கேட்ட போது,


தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இயந்திரப்பழுதுகள் குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். வெகு விரைவில் பழுதுகளை சீர்செய்து சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் மத்திய சுகாதார அமைச்சர் யாழிற்கு வருகை தந்த போது குறித்த விடயம் தொடர்பாக தெரிவித்திருந்தோம். புதிய இயந்திரம் கொள்வனவு தொடர்பாகவும் நிரந்தரமான நிர்வாக அதிகாரிகளை வைத்தியசாலைகளுக்கு நியமிப்பது தொடர்பாகவும் தெரிவித்திருந்தோம். அதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக அவர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் உடனடியாக சீர் செய்யக்கூடிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)





வலி.வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட பொதுமக்களுக்காக கீரிமலைப் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன கெட்டியாராட்சி உட்பட அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

## தொழில் திணைக்களத்தின் மாகாணமட்ட ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழில் திணைக்களத்தின் மாகாண மட்ட ஆலோசனைச் சபைக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தொழில் தருநர் மற்றும் கொள்வோரிடையே பரஸ்பர நட்புறவினை வளர்க்கவும் தொழில் பிணக்குகள் குறைந்த சமூகத்தினை உருவாக்கும் நோக்கத்துடனும் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## கமலாதேவி ஞாபகார்த்த நுழைவாயில் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் இரத்தினம் கமலாதேவி ஞாபகார்த்த நுழைவாயில் திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கரணவாய் கிராய் இந்து மயானத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு நிலை பிரதம முகாமையாளர் மா.பரமானந்தம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் , இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோனாதிராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

## இரு இளைஞர்கள் விபத்தில் படுகாயம்

மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.45 மணியளவில் கலிகைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த தவநேசன் குகதாசன் (வயது-23) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளும் இருசக்கர உழவியந்திரம் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9.15 மணியளவில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இவ்விபத்தில் கரணவாயைச் சேர்ந்த சிவலோகநாதன் சுதர்சன் (வயது-21) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறை- யாழ்ப்பாண வீதி வழியாகச் சென்ற இருசக்கர உழவியந்திரத்தை திருப்ப முற்பட்ட போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த பல்சர் மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-60)





யாழ். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு தினமும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அதிபர் ரீ.தேவராஜா, வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக மொழியியற்றுறைப் பேராசிரியர் திருமதி. சுபோதினி ரமேஸ் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

## நெல்லியடி சந்தைக்குமுன் பாதசாரிக் கடவை இல்லை

நெல்லியடிசந்தைக்கு முன்பாக பாதசாரிக் கடவை இன்மையால் அதிக விபத்துக்கள் ஏற்படுவதாக பொதுமக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


பருத்தித்துறை- யாழ்ப்பாண பிரதான வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதாகும்.

இவ்வீதிபுனரமைப்புச்செய்யப்பட்டு காப்பெற் இடப்பட்ட போது வீதிக்குறியீடுகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் நெல்லியடி சந்தைக்கு முன்பாக பாதசாரிக் கடவையினை அவர்கள் அமைக்கவில்லை. இதன் காரணமாக தினந்தோறும் சந்தைக்கு செல்வோர் வீதியினை கடப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சந்தைக்கு வந்து செல்லும் ஆட்டோ வண்டிகளும் அடிக்கடி விபத்துக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே சந்தைக்கு முன்பாக பாதசாரிக்கடவையினை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-60)

# மாயமான விமானம் மீட்கப்பட வேண்டும் என்று மாணவர்கள் விமானவடிவில் நின்று பிரார்த்தனை



29 பேருடன் மாயமான AN32 என்ற இந்திய விமானம் ஆழமான பகுதியில் சென்றிருக்கலாம் என கருதப்படுவதால், விமானத்தை தேடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் தேடும் பணிக்காக கப்பல்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இதேவேளை மாயமான விமானம் பத்திரமாக மீட்கப்பட வேண்டும் என்று ஜம்முவில் பாடசாலை மாணவர்கள் விமான வடிவில் நின்று பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)





சென்னையிலிருந்து 200 கடல் மைல் தொலைவில் விமானத்தை தேடும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

## சச்சின் பிரார்த்தனை



சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது மாயமான விமானப்படை விமானத்தில் பயணித்தவர்கள் பாதுகாப்பாகத் திரும்ப பிரார்த்தனை செய்வதாக கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

## மாயமான விமானப்படை விமானத்தைத் தேடும் பணியில் ரிசாட் செயற்கைக்கோள் ஈடுபட்டுள்ளது




பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சுப்பிரமணியம் கேதீஸ்வரன்
SLPS-GrIII

எமது பாடசாலை ஆசிரியரான திரு.சு.கேதீஸ்வரன் அவர்கள் அதிபர் தரம் III இற்கான போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று தரம் III அதிபருக்கான நியமனக்கடிதத்தை கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமிடமிருந்துபெற்றமையையிட்டு நாம் மிகுந்த மனமகிழ்ச்சி கொள்வதுடன் அவரது பணி மேலும் சிறப்புற்று தொடர வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
மு/புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயம்,
முல்லைத்தீவு.

(சி/4286)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:18<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/6126 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 52 செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6135 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 61செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6129 | பிறப்பு: 1979RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 84 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/6143 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 6<br>தகைமை/தொழில்:A/L டோகா<br>தொ.இ: B/6131 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:சித்தவைத்தியர்<br>தொ.இ: G/6144 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 82 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/Lகனடா PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6133 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 49 செவ் 7 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6148 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர் தொடர்பில்

# தகவல் தரும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்



### வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொன், பொருள் சேர்ப்பதில் கவனம் செலுத்தும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நலனில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகின்றார்கள் என கேள்வி எழுப்பினார் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சிறி சிந்தாமணி விநாயகர் கலாசார மண்டபத்தில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு




உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

புதிதாக நியமனம் பெற்றுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவிற்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரானவேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். சிறுவர்கள் இன்று பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அதேவேளை பாடசாலைகளிலும் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொன், பொருள் சேர்ப்பதில் கவனம் செலுத்தும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நலனில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகின்றார்கள் என அவர் கேள்வி எழுப்பினார்.

ஆசிரியர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்ட சிவில் அமைப்புக்கள் மூலம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவுமாறு கோரிக்கை விடுத்தார்.

எமது கிராமங்களில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது, பாடசாலை செல்லாமல் வீடுகளில் இருக்கும் சிறுவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு பாடசாலை செல்ல ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

விசேடமாக கிராமங்களில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் என சந்தேகிக்கப்படுவோர் தொடர்பில் தகவல் தரும் பட்சத்தில்



உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து பொது மக்கள் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்களையும் அவர் இதன் போது வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் குருமார்கள், அரசாங்க அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்கள், பொருளாதார நல உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள். பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

**அலுவலக தொலைபேசி எண் - 024 222 2856, 024 222 4491**
**உத்தியோகபூர்வ மொபைல் எண் - 071 859 1017**
**உத்தியோகபூர்வ தொலைநகல் எண்- 024 222 2227**
**உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி-dig.vavuniya@police.lk சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு உடனடியாக அறிவிக்க முடியும்.**

## முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பம்

மிக நீண்ட காலமாக எவ்விதமான செயற்பாடுகளும் இன்றிக் காணப்பட்ட முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கம் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை புதிய நிர்வாகத் தெரிவுடன் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளதாக முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கச் செயலாளர் ப. டிருசாந் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கடந்த 2 1/2 வருடங்களுக்கு, மேலாக செயற்பாடுகளை முன்னெடுக்காமல் இருந்த மேற்படி வர்த்தக சங்கத்தை மீளவும் இயங்கச் செய்யும் நோக்குடன் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம் பெற்றது.

இதற்கமைய தலைவராக க.விஜயகுமார், செயலாளராக ப. டிருசாந் பொருளாராக சி.சிற்சபேசன், உப-தலைவராக யோ.வசந்தன், உப- செயலாளராக வி.விமலேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி புதிய நிர்வாகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட முதலாவது பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மு/ முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் பொதுச் சபையின் கோரிக்கைக்கு இணங்க, மேலும் நான்கு பேர் நிர்வாக சபைக்கு உள்வாங்கப்பட்டதுடன் முதுபெரும் வர்த்தகரான மு. முத்துச்சுப்பிரமணியம் போசகராக தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் மேற்படி வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது முக்கிய விடயமாக எதிர்வரும் காலங்களில் வர்த்தக நிலையங்களை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஊடாக பதிவு செய்யும் போது வர்த்தக சங்கத்தினுடைய உறுதிப்படுத்தல் சான்றிதழ் அவசியம் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-310)

## வெற்றுக்காணிகளில் விசஜந்துகள் பெருகி குடிமனைகளினுள் நகர்வு

### சட்டவிரோத செயற்பாடுகளும் நடைபெறுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் கவனிப்பாரின்றி காணப்படும் வெற்றுக் காணிகளால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தாம் தெரியப்படுத்தியும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென பிரதேச வாழ் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மேற்படி பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களில் கவனிப்பாரின்றி காணப்படும் வெற்றுக் காணிகளில் இருந்து பெருமளவில் விச ஜந்துகள் பெருகுவதுடன் அவை குடிமனைகளை நோக்கி நகர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பற்றைகள் சூழ்ந்து காணப்படும் காணிகளில் முறிந்து விழும் நிலையில் பாரிய உயர்ந்த மரங்கள் நிற்கின்றன எனவும் பற்றைகளும் மரங்களும் சூழ்ந்து காணப்படும் இவ்வாறான காணிகளில் சட்டவிரோதமான நடவடிக்கைகளும் இடம் பெறுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (2-310)

## மணல் அனுமதிப்பத்திரத்தை மட்டுப்படுத்தாது அதிகரிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கனியவள திணைக்களத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிக்கென மாதாந்தம் 100 கியுப் மணலுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. இது தமது தேவைக்கு போதாமலிருப்பதாகவும் இதனை அதிகரிக்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலேயே அதிகளவில் இயற்கை வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக கருங்கல் அகழ்வு, மணல் அகழ்வு, கிரவல் அகழ்வு, தேக்கமரங்கள் என்பன அறுத்து விற்பனை செய்யப்படுதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இச்செயற்பாடுகள் வனவள திணைக்களம், சுற்றுச்சூழல் பகுதி உள்ளிட்ட அனைவரது கண்காணிப்பின் கீழும் சிறப்பாக தங்குதடையின்றி இடம்பெறுகிறது எனவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

கடந்த கால யுத்தத்தில் பாதிக்கப்பட்டு தமது உடைமைகள் அனைத்தையும் இழந்து வீட்டுத்தேவைக்கான அனுமதியுடன் செய்கின்ற மணல் அகழ்வுகளுக்கு அதிகாரிகள் தடை விதிக்கின்றனர் எனவும் வெளி மாவட்டங்களிலிருந்து பலர் வருகைதந்து மணல் அகழ்வு உள்ளிட்ட பல செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் இவர்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதைக்கூட அதிகாரிகள் கண்டும் காணாமலும் அசண்டையீனமாகவும் இருக்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வெளியிடங்களிலிருந்து வருகைதந்துள்ளவர்களுக்கு 500 கியுப்பிற்கு மேற்பட்ட மணல் அகழ்விற்கு அனுமதி வழங்குபவர்கள் பாதிக்கப்படும் மக்கள் பிரதேச செயலகத்தில் பெறும் இந்த அனுமதிப்பத்திரத்தை மட்டுப்படுத்துவது ஏன் என கேள்வியும் எழுப்புகின்றனர்.

பிரதேசசெயலகத்தில் 20 ஆம் திகதியுடன் அனுமதிப் பத்திரம் நிறைவடைகின்றமையால் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கான மணல் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் இவற்றை கவனத்தில் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)








வவுனியா தோணிக்கல் சிவாலய முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கண்காணிப்பு கமராக்களின் அவசியத்தை உணர்ந்து பொருத்தமான இடங்களில் பொருத்துங்கள்

## முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வலியுறுத்து



**பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோர் தமது வாழ்விடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் எடுத்து செயற்படுவதோடு பாதுகாப்பின் நிமித்தம் தங்களினால் பொருத்தப்படும் கண்காணிப்பு கமராக்களை வெறுமனே அழகுபடுத்தும் பொருளாகப் பொருத்தாமல் அதனுடைய அவசியத்தை உணர்ந்து துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைப்படி பொருத்தமான இடங்களில் கண்காணிப்பு கமராக்களையும் அதற்கான சாதனங்களையும் பொருத்த வேண்டும் என முள்ளியவளை பொ.லிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.ரமேஷ் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.**

முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இவற்றை பொருத்துவதன் ஊடாக தமது வர்த்தக நிலையங்களையும் சொத்துக்களையும் வாழ்விடங்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியுமென முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

பொலிஸாராகிய நாம் எம்மால் இயன்றவரை வர்த்தக நிலையங்களுக்கான பாதுகாப்பை வழங்கி வருகின்றோம்.

எமது பாதுகாப்பையும் மீறி சில வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புக்கள் இருப்பதால் இயலுமானவர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களுக்கு பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்களைப் பொருத்துவதன் ஊடாக திருட்டுக்களைத் தடுப்பதற்கு முடியும்என அவர்தெரிவித்தார்.

அத்துடன் திருட்டுக்கள் இடம்பெற்றால் சம்பந்தப் பட்ட குற்றவாளிகளை இனங் கண்டுகொள்ள அவை துணை புரியும் எனவும் கூறினார்.

இதேவேளை் வெளி இடங்களில் இருந்து எமது பிரதேசங்களில் தங்கி நிற்பவர்கள் தொடர்பிலும் வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் உரிய கவனமெடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டதுடன் தேவையற்ற விதங்களில்தத்தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கூடி நிற்பவர்கள் தொடர்பிலும் வர்த்தகர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (2-310)




## வெளிநாட்டில்
## வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பணம் திரட்டிய இளம் யுவதி தலைமறைவு

வெளிநாடு ஒன்றிலுள்ள தனது சிறிய தந்தையின் கம்பனிக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி முள்ளியவளை பிரதேசத்திலுள்ள கிராமங்களில் பல இலட்சம் ரூபாவை மோசடி செய்து கொண்டதாக கூறப்படும் யுவதியொருவர் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முள்ளியவளை, நாவற்காடு, சூரிபுரம் ஆகிய் கிராமங்களிலுள்ள சுமார் 10 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தலா ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா வீதம் பிரஸ்தாப பெண்ணிடம் வழங்கி ஏமாந்துள்ளனர்.

மிகவும் சூட்சுமமான முறையில் குறித்த இளம் யுவதி ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தான் எந்த சந்தர்ப்பத்திலும் மாட்டிக்கொள்ளாத முறையில் சாட்சிகளோ தடையங்களோ இல்லாத நிலையில் குறித்த மோசடியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த மோசடி தொடர்பில் பொலிஸாரிடம் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லையென அறிய முடிகின்றது.

இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் உரிய நடவக்கை எடுக்கமுடியுமெனபொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-310)

## முன்னறிவித்தலின்றி மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது
### பொதுமக்கள், வர்த்தகர்கள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பிரதேசங்களில் முன்னறிவித்தல் எதுவுமின்றி அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவதன் காரணமாக தாம் பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்வதாக பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் இவ்வாறான நிலை காணப்படுவதுடன் சில நாட்களில் பல தடவைகள் முன்னறிவித்தல் எதுவுமின்றி மின்சாரத் தடை ஏற்பட்டு மீளவும்வழங்கப்படுவது அண்மைய நாட்களாக தொடர்கிறது என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆதலால் மின்சார சபை உயர் அதிகாரிகள் இது தொடர்பில் கூடிய கவனமெடுத்து இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பிற்காக காத்திருப்பு

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்களுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கெயார் நிறுவனம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் ஆரம்பமான 2016 ஆம் ஆண்டின் வணிக கண்காட்சியும் தொழிற்சந்தையினையும் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி,முல்லைத் தீவு,வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்கள் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பினாலும் பல்வேறுபட்ட இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் மட்டும் 82 ஆயிரம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்றியுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இருபதாயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களும் முல்லைத் தீவு மாவட்டத்தில் பதினாறாயிரத்து 800 பேரும் மன்னார் மாவட்டத்தில் பத்தொன்பதாயிரத்து 200 பேரும் வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 300 பேரும் தொழில் வாய்ப்புக்களுக்காக பதிவு செய்துள்ளனர்.

இவையொரு தெரியாத ஒரு புள்ளி விபரங்களாகவும் இதில் பதிவுகளுக்கு உட்படுததப்படாதவர்களும் உள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ரயிதன் என்ற இளைஞர் ஒருவர் வாய்க்கால் வெட்டுவதற்கான கருவியை கண்டு பிடித்துள்ளார்.

இவ்வாறான கண்டு பிடிப்புக்கள் எமது இளைஞர் யுவதிகளிடத்தில் உள்ள போதும் ஆனால் அவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதில்லை. அத்துடன் அதன் உத்வேகத்திற் கான காரணங்கள் தேடிக் கொடுக்கப்படுவதில்லை. இவை வழங்கப் படும் போது உலகத்தில் இவர்களும் சாதிக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும' கூறுகையில்,

தேடல்கள் இருக்கும் வரைக்கும் உலகத்தில் உயிர்கள் தமது இருப்பை தீர்மானித்துக் கொள்ள முடியும்.அந்த தேடல்களை சரியான வகையில் உருவாக்கி கொள்வதற்கும் அந்த தேடலுக்கான காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கும் ஒரு பாதை வரலாற்றுப் பக்கம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்எனவும் தெரிவித்துக் கொண்டார். (2-312)

## தனிமையில் இருந்த சிறுவன் மீட்கப்பட்டு பொலிஸில் ஒப்படைப்பு

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறுவன் ஒருவன் முல்லைத் தீவு இளைஞர்களால மீட்கப் பட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது.

யாழ்ப்பாணம் சுங்கானை சுழிபுரத்தை சேர்ந்த கரிகாலன் சுதர்சன் (வயது-11) என்ற சிறுவன் முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் தனிமையில் இருந்ததை அவதானித்த இளைஞர்கள் பிரஸ்தாப சிறுவனை சந்தித்து வினவிய போதுதான் தந்தையுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்த சிறுவனை இளைஞர்கள் மீட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். தற்போது சிறுவன் முல்லைத் தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (2-281)

## சங்கிலியன் பூங்காவில் இன்று மாவீரன் பண்டாரவன்னியன் நாடகம்

வடக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு நடத்திவரும் பனை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை சங்கிலியன் பூங்காவில் கண்காட்சிகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதையொட்டிய கண்காட்சிகள் 14 காட்சிக்கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த கண்காட்சிகளையும் கலைநிகழ்வுகளையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாவட்டம் பொறுப்பெடுத்து நடத்தி வருகிறது

அந்தவகையில் இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள் இதனை நடத்த ஏற்பாடு செய்துள்ளதோடு சிறப்பு கலைநிகழ்வாக கற்சிலைமடு பரந்தாமன் கலாமன்றம் வழங்கும் மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் இடம் பெறவுள்ளமையும் இங்கு குறிப் பிடத்தக்கது. (2-281)

# அதிசொகுசு வாகனம் தடம்புரண்டது

## முள்ளியவளை மூன்றாம் கட்டையில் சம்பவம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த அதிசொகுசுவாகனம் ஒன்று வீதியோரமாக தடம் புரண்டது. இதன்போது வாகனத்தின் முன்பகுதி சேதத்துக்குள்ளானதாக தெரிவிக் கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் முள்ளியவளை 3 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

மேற்படி வாகனத்தில் பயணித்த கரைதுறைப்பற்று இணக்கச் சபை உறுப்பினர்கள் எவ்வித காயமுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.




இது தொடர்பில் தெரிய வருவதாவது, முல்லைத் தீவில் இருந்து முள்ளியவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வாகனம் மேற்படி பகுதியை அண்மித்த வேளை வேகக் கட்டுப் பாட்டை இழந்து தடம் புரண்டதில் இவ்விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகன்றது. (2-310)






யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவி வைத்திய கலாநிதி டாக்டர் பூமகள்குமார், பாடசாலை அதிபர் திருமதி. வே.சண்முகரத்தினம் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் பிரதம விருந்தினரது பாரியாரான வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி. ரோகினி இரவீந்திரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.





சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலிகாமம் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் கிருபானந்தன் கலந்து கொண்டிருந்தார்.





யாழ். இந்துக்கல்லூரி சாரண மாணவர்களால் நடத்தப்பட்ட ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன. இதன்போது மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றதை படங்களில் காணலாம்.





சமூகப் புரவலர், வித்தியானந்த கீர்த்தி அமரர் மாணிக்கம் சுப்பிரமணியத்தின் நினைவஞ்சலி நிகழ்வு அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா, பேராசிரியர் க.தேவராஜா உட்பட பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.






யாழ்.மானிப்பாயில் அமைந்துள்ள மைய சுற்று வட்டத்தில் LIC Lanka கிளை தனது பெயர்ப்பலகையை நிறுவியுள்ளது. இதற்கான திறப்பு விழாவும் கிளையின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் அண்மையில் இடம்பெற்ற போது...

# யாழ்ப்பாணத்தில் இசை வேள்வி

யாழ்ப்பாணத்தில் இசை வேள்வி என்பது யாழ்ப்பாணத்து மக்களுக்கு கிடைத்த ஒரு பேறாக நான் கருதுகிறேன். இந்தியா சென்று பார்க்க முடியாதவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தில் நேரடியாக இந்த இசை வேள்வியில் இசையை இரசிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய கம்பன் கழகத்திற்கு மிக்க நன்றி கூறுகின்றோம்.




இவ் இசை வேள்வியானது அன்னை எம்.எஸ்.சுப்புலக்சுமியின் அகவை நூறில் அன்னைக்கு அர்ப்பணமாக



அமைந்தமை போற்றுவதற்குரிய செயலே.

ஒவ்வொரு அரங்கும் நம் நாட்டின் கலைப் பொக்கிஷங்களாக மிளிர்ந்த அமரக் கலைஞர்கள் ஆசியோடு ஒழுங்கமைக்கப்பட்டமை கழகத்தின் கலையுலகை என்றும் மேன்மைப் படுத்துவார்கள் என்பதற்குச் சான்றாக அமைந்தது.

அத்துடன் தினமும் சைவத் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய முறைக்கமைய மங்கல இசையுடன் விழாக்கள் மங்கலகரமாக ஆரம்பமாகியமை பெரும் சிறப்



பம்சம். மங்கல இசை வழங்கி நம் நாட்டின் இசைவேளான் மக்களின் தெய்வீகமான தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் இந்திய இசைக் கலைஞர்களையும் ஈர்க்க வல்லனவாக மிகச் சிறப்பாக அரங்கேறின. தொடர்ந்த கடவுள் வாழ்த்து நிகழ்விலும் எம் இளம் இசை வல்லுநர்கள் இந்திய இசை வல்லுநர்கள் முன்னே எம்மை நிமிர்ந்திருக்கவே வைத்தனர்.

நிகழ்ச்சிகள் வரிசையில் ஆரம்பநாளில் ஈழத்து இசைக் கலைஞர்களும் இந்தியக் கலைஞர்களும் மல்லாடி சகோதரர்களும் இணைந்து தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனை இசைத்தமை இசை வேள்விக்கு தெய்வீக ஆசி பெறும் நிகழ்வாக அமைந்தது. தொடரும் நாட்களில் மல்லாடி சகோதரர்கள், அபிஷேக் ரகுராம், ஓ.எஸ். தியாகராஜன், மதுரை-ரி.என்.சேஷகோபாலன், ஸ்ரீமதி. மும்பை ஜெயஸ்ரீ இப் பெரும் இந்திய இசைக் கலைஞர்களின் கச்சேரிகள் எங்கள் எல்லோர் மனதையும் பெரிதும் கவர்ந்தன. வாழ்க்கையிலே எமக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறாக நாம் கருதுகிறோம். சுமார் 3 மணித்தியாலங்கள் ஒவ்வொரு கலைஞர் களும் மிக அற்புதமாக கர்நாடக இசையின் சிறப்பம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்து ரசிகர்கள் மிக உற்சாகமாக இவற்றில் பங்குபற்றி தம் கவலைகளை எல்லாம் மறந்து இந்த ஐந்து நாட்களும் இசையுணர்வுடன் இறைபக்தி, குரு பக்தி எல்லாவற்றையும் அறிய வாய்ப்பு ஏற்பட்டது.

அத்துடன் இங்கே முக்கியமாக பக்கவாத்தியக் கலைஞர்களின் ஆற்றலை அளவிட முடியாது. அவர்களின் ஆற்றல் மிக அற்புதமானது. கலைஞர்களின் கச்சேரி சிறக்க மிக்க சாதுர்யமாகவு, மிக நுட்பமாக வாத்தியங்களை இசைத்து பிரமிக்க வைத்தனர். உற்சாகமாக அவர்கள் ஒவ்வொருவரும் தம் இசைக்



கருவிகளை இசைத்த பாங்கு எம்மை மெய்சிலிர்க்க வைத்தது. அவர்கள் கரங்களில் கலைமகள் களி நடனம் புரிந்தாள் என்றே கூறலாம்.

அடுத்து இருநாட்களில் - இசை உரை நிகழ்வும் காலையில் மிக அற்புதமாக நடை பெற்றது.

லயஞானம் பற்றி மதுரை ரி.என்.சேஷகோபாலனால் கருத்தரங்கு நடத்தப்பட் டது. மிகத் தெளிவாக செய்முறை விளக்கமும் கேள்விகளுக்கு விளக்க மான பதிலும் கிடைத்தன.

அடுத்த நாள் ஸ்ரீமதி மும்பை ஜெயஸ்ரீயின் சுருதி ஞானம் பற்றிய விளக்கத்தினை தத்ரூபமாக ஆற்றினார். கேள்விகளுக்கும் தகுந்த பதில் வழங்கினார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் இறைபக்தி, குருபக்தி நிறைகுடம் தளம்பா தன்மை எல்லோர் மனதையும் கவர்ந்து கலை மகளை நேரில் தரிசித்தாற் போன்ற தெய்வீக உணர்வை ஏற்படுத்தியது.

ஆகவே ஒட்டு மொத்தமாக யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற இசை வேள்வி எல்லோராலும் போற்றப்பட்டது. இவ்வளவு கைங்கரியத்தை யாழ்ப்பாணத்து ரசிகர்களுக்கு ஏற்படுத்திய அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் பெருமைக்குரிய கம்ப வாரிதி ஜெயராஜுக்கு இந்த யாழ்ப்பாணத்து ரசிகர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மென்மேலும் இப்படியான நிகழ்வுகளை நம் நாட்டில் ஏற்படுத்தி எமது கலைஞர்களுக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி இசையை போற்றி பாதுகாப்போம்.



திருமதி
விக்கினேஸ்வரி
நரேந்திரா
இசைத்துறை
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற்கல்லூரி,
கோப்பாய்.

# செய்தித்துளிகள்

## இலங்கையை குட்டி சீனாவாக மாற்ற முனைந்தார் மகிந்த

இலங்கையைக் குட்டி சீனாவாக மாற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார் என்று அமைச்சர் கபீர் காஸிம் குற்றஞ் சாட்டியுள்ளார். சீனாவுடன் எந்த இருதரப்பு உடன்பாடுகளையும் செய்து கொள்ளாமலேயே, சீனாவில் இருந்து தொழிலாளர்களை யும், பல்வேறு பொருட்களையும் மகிந்த ராஜபக்ஷ கொண்டு வந்தார்" என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-5)

## இரத்ததான முகாம்

யாழ். சுந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் 7 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகளின் 10 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வேதாந்தமடத்தில் இரத்ததான முகாம் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இவ் உயிர் காக்கும் உன்னத பணியில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (இ-5)

## இலங்கையின் இளநீர் லண்டனில் விற்பனை

இலங்கையின் இளநீர் லண்டனில் விற்பனை செய்யும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சில நிறுவனங்களினால் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து இந்த இளநீர் விற்பனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டனுக்கான இலங்கை பதில் உயர்ஸ்தானிகர் சுகீஸ்வர குணரட்ன தெரிவித்துள்ளார். (இ-5)

## கேரள கஞ்சாவுடன் மூவர் கைது!

ஹொரணை பிரதேசத்தில் 15 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பாணந்துறை பொலிஸ் பிரிவின் சட்ட அதிகாரமளித்தல் பிரிவின் அதிகாரிகள் ஹொரணை, உடவத்தை மற்றும் பெல்லப்பிட்டிய பிரதேசங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, சந்தேகநபர்களிடம் இருந்து 15 கிலோ கிராம் கேரள கஞ்சா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-5)

## பாத யாத்திரை நடத்துவதால் ஆட்சியில் மாற்றம் ஏற்படாது

பாத யாத்திரை நடத்துவதனால் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரித்துள்ளார். (இ-5)

## பிரமோற்சவ திருவிழா

யாழ்.சாவகச்சேரி நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த பிரமோற்சவ திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். (இ-29)

# உலக சுகாதார தாபனத்தின் விசேட நிபுணர்கள் குழு இலங்கை விஜயம்

உலகை சுகாதார தாபனத்தின் விசேட நிபுணர்கள் குழுவொன்று நாளை மறுதினம் 27 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்செய்ய உள்ளதாக மலேரியா தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மலேரியா தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மலேரியா நோய் நிலைமை தொடர்பில் ஆய்வு செய்து, இலங்கை மலேரியா நோய் அற்ற நாடு என்பதை உறுதிப்படுவதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு இந்த குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாளை மறுதினம் 27 ஆம் திகதி முதல் இரண்டு வார காலம் அந்தக் குழுவினர் இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

கடந்த 3 வருட காலத்திற்குள் இலங்கையில் மலேரியா நோயாளர்கள் எவரும் பதிவாகி இருக்கவில்லை என்று வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (இ-5)





# சீனாவில் பேய்
# 225 பேர் உயி





(பீஜிங்)

**சீனாவில் கடந்த சில நாட்களாக கொட்டித் தீர்த்து வரும் அடை மழையால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் மற்றும் விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்துள்ளது. மத்திய ஹூபெய் மாகாணத்தில் 2.5 இலட்சம் மக்கள் அனர்த்தத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.**

சீனாவில் இப்போது கோடை காலம். ஆனாலும் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. வடக்கு மற்றும் மத்திய சீனாவில் இடைவிடாது மழை பெய்தது. ஹூபெய், ஹெனான் மாகாணங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அங்கு பல்லாயிரக்கணக்கான வீடுகள் இடிந்து சரிந்தன. இலட்சக்கணக்கான ஹெக்டேயர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

பெரும்பாலான இடங்களில் மின்சாரமும், தகவல் தொடர்பும் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து முற்றிலும் முடங்கிப்போய் உள்ளது. மழை வெள்ளம் தொடர்பான விபத்துக்களில் 176 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகின. மேலும் சடலங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 225 ஆக உயர்ந்து உள்ளது. மீட்பு மற்றும் நிவாரண குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## அடுத்தடுத்த தாக்குதல்களால் ஆடிப்போயிருக்கும் ஐரோப்பா

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் வணிக வளாகம் ஒன்றில் வைத்து ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அந்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இது குறித்து, அந்நாட்டு பிரதமர் ஏஞ்சலா மெர்கல், பாதுகாப்புச் சபையினை கூட்டி, அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

கடந்த, எட்டு நாட்களுக்குள், அடுத்தடுத்து மூன்று தாக்குதல்கள் நடந்துள்ளதால், ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சியில் உறைந்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் மற்றும் ஒரு நாடான பிரான்ஸின் நைஸ் நகரில், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 85 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நடந்த சில நாட்களில், ஜேர்மனியின், தெற்கு பகுதியில், புகையிரதத்தில் பயணம் செய்த பயணிகளை இலக்கு வைத்து மற்றும் ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், ஜேர்மனியில் மீண்டும் ஒரு பயங்கரவாத தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில் 9 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான தொடர் தாக்குதல்கள் காரணமாக ஜேர்மனியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு சபை கூட்டப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தின் போது பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக, விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் தாக்குதல்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது ஐரோப்பாவில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாத தாக்குதல்கள் குறித்த தகவல்கள் மற்றும் அதன் பின்னணி போன்ற விபரங்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்வது குறித்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் கூடி விவாதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜேர்மனியில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு, அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் அடுத்தடுத்து தாக்குதல் நடந்து வரும் நிலையில், இது குறித்து, அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்றும் ஐரோப்பிய உளவு நிறுவனங்கள் ஏற்கனவே எச்சரித்துள்ளன.

இதேவேளை, முனிச் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக, வீடியோ மற்றும் புகைப் படங்கள் இருந்தால், தங்களிடம் ஒப்படைக்குமாறு அந்நாட்டு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த தாக்குதலின் பின்னணியில் மேலும் பலர் இருக்கக்கூடும் என அந்நாட்டு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-5)

## 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பு; எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் முறையீடு




வெனிசுவெலா நாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராகவும், ஆதரவாகவும் போராட்டங்கள் நடைபெற்றன. அதில் 40 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இது தொடர்பான வழக்கில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் அரசியல் எதிரியாக கருதப்படுகிற எதிர்க் கட்சி தலைவர் லியோபோல்டோ லோபஸ் கைது செய்யப்பட்டார். கலகத்தை தூண்டியதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அதில் அவருக்கு கடந்த செப்டெம்பர் மாதம் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனையை எதிர்த்து நேற்று அவர் மேல் முறையீடு செய்துள்ளார். இந்த வழக்கு விசாரணையின்போது அவர் தன்னை நிரபராதி என கூறினார்.

"நான் அமைதியான முறையில்தான் போராட்டம் நடத்தினேன். அரசியல் சட்டத்தின்படிதான் செயற்பட்டேன். மற்ற வெனிசுவெலா மக்களுக்கு உள்ள உரிமையைத்தான் நானும் எனது உரிமையாக கருதி செயற்பட்டேன்" என தெரிவித்தார்.

அவரது ஆதரவாளர்கள் நீதிமன்ற வளாகத்தில் கூடி. அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோஷமிட்டனர். இருப்பினும் அவரது மேல் முறையீடு ஏற்கப்படுமா? என்பது தெரிய 10 நாட்கள் ஆகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## இராணுவ விமானம் மாயமானது குறித்து மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும்
## விஜயகாந்த் வலியுறுத்து



(சென்னை)

சென்னையில் இருந்து அந்தமானுக்கு 29 பேருடன் சென்ற இராணுவ் விமானம் திடீரென்று மாயமானது. இந்த விமானம் கடலில் விழுந்து மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கடந்த ஆண்டும் இதேபோல் ஒரு விமானம் மாயமானது. இதில் பயணித்த 3 பேர் இறந்தனர்.

மீண்டும் அதேபோல் செய்தி வந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. தொடர்ந்து இது போன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருக்க மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

மாயமான விமானத்தில் பயணித்த 29 குடும்பங்களுக்கு எனது ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன் என தே.மு. தி.க. நிறுவனத் தலைவர்விஜயகாந்த்வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (இ-5)



## ஆப்கா
## பிரதம

ஆப்கானி
காபூலில் நடை
தாக்குதலுக்கு
நரேந்திர மோ
ணாப் முகர்ஜி
கண்டனம் தெ
ஆப்கானி
காபூலில் உள்
கத்தில் சிறுபான்
த்தினரின் சார்பி
பாட்டத்தில், சக்
ண்டு வெடித்தது
தாக்குதலில், ச
80 பேர் உயிரி
207 பேர்
வைத்தியசாலை
டுள்ளனர். அதி
கவலைக்கிடம
தாக்குதலுக்கு
அமைப்பு பொறு
இந்நிலைய
சம்பவத்திற்கு

# ய் மழை
# பிரிழப்பு





த் தீத்து
னர்த்தும்
ந்தோர்
ள்ளது.
லேட்சம்
னர்.

...ள்ளது. மழை.
...பான விபத்துக்
...உயிரிழந்ததாக
...பாகின. மேலும்
...ட்டன. இதனை
...தோர் எண்ணி
...யர்ந்து உள்ளது.
...ரண குழுவினர்
...திகளுக்கு அனு
...ளனர். (இ-5)



# கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது தற்கொலைப்படைத் தாக்குதல்

## 80 பேர் பரிதாபமாகப் பலி!



ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் பலி எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் 'ஷியா ஹசாரா' சிறுபான்மை இன மக்கள் வாழ்கிற பகுதியில் மின்வழி பாதையை அமைக்காமல், புறவழியில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் தங்களுக்கு மின் இணைப்பு கிடைக்காது என்பதால், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக அந்த இனத்தவர்கள், தலைநகர் காபூலில் தெஹ் மசாங் சதுக்கத்தில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கில் கூடினர். அப்போது கூட்டத்தில் ஊடுருவிய பயங்கரவாதிகள், சக்தி வாய்ந்த குண்டை வெடிக்க செய்தனர். இதில் அந்த பகுதியே அதிர்ந்தது. உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக கூட்டத்தினர் நாலா பக்கமும் சிதறி ஓடினர்.



தற்கொலைப்படைத் தீவிரவாதி நடத்திய இந்த தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. 230 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிய வந்துள்ளது. படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த குண்டு வெடிப்புக்கு ஐ.எஸ். இயக்கத்தினர் பொறுப்பேற்றனர். அமைதி வழியில் போராட்டம் நடத்திய மக்களை கொன்று குவித்ததற்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-5)

# இந்தியாவுக்குத்தான் காஷ்மீர் சொந்தம்

## பாகிஸ்தானின் பகல் கனவு பலிக்காது—சுஷ்மா

இந்தியாவுக்குச் சொந்தமான காஷ்மீர், பாகிஸ்தானின் ஒரு பகுதியாக மாறும் என்ற நவாஸ் ஷெரீப்பின் கனவு பலிக்காது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் என்றாவது ஒரு நாள், பாகிஸ்தானின் ஒரு பகுதியாக மாறும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார். அதற்கு பதிலடியாக, மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று முன்தினம் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

காஷ்மீர், பாகிஸ்தானின் ஒரு பகுதியாக மாறும் என்று நவாஸ் ஷெரீப் கூறியிருப்பது, ஒரு மருட்சியான, ஆபத்தான கனவு. இந்தக் கனவு ஒருபோதும் நிறைவேறாது. பயங்கரவாதம் மீதான பாகிஸ்தானின் அபிமானமே இப்படி கூறுவதற்குக் காரணம்.

ஒட்டுமொத்த காஷ்மீரும் இந்தியாவுக்கு சொந்தம். நீங்கள் இந்த பூலோக சொர்க்கத்தை ஒருபோதும் பயங்கரவாத கூடாரமாக மாற்ற முடியாது. கடந்த சில நாட்களாகவே, ஹிஸ்புல் முஜாகிதீன் பயங்கரவாத இய்க்க தளபதி பர்கான் வானியை 'தியாகி' என்று நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட பாகிஸ்தான் தலைவர்கள் கூறி வருகிறார்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள், பாதுகாப்பு படையினர் கொலை உட்பட பல்வேறு கொடிய குற்றங்களுக்காக அவரது தலைக்கு ரூ.10 இலட்சம் விலை நிர்ணயிக்கப்பட்டது அவர்களுக்கு தெரியாதா?

அதை விட கண்டனத்துக்குரிய விடயம் என்னவென்றால், எல்லைக்கு அப்பால் இருந்து காஷ்மீரில் வன்முறையை தூண்டி விடுவதும், பயங்கரவாதி களை புகழ்வதும் ஆகும். ஐ.நாவால் 'பயங்கரவாதி' என்று அறிவிக்கப்பட்ட ஹபீஸ் சயீத் மற்றும் இதர பிரபல பயங்கரவாதிகளின் துணையுடன் பாகிஸ்தான் அரசு இயந்திரம் இந்த பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.


படையினர் காயம்

காஷ்மீரை சீர்குலைக்க பாகிஸ்தானின் பணமும், பயங்கரவாதிகளும், அரசு இயந்திரமும் பயன்படுத்தப்படுகின்றன.

தனது சொந்த மக்கள் மீதே போர் விமானங்களையும், பீரங்கிகளையும் பயன்படுத்தும் பாகிஸ்தான், எங்களது துணிச்சலான, ஒழுக்கமான பொலிஸ் மீதோ, பாதுகாப்புப் படையினர் மீதோ விரல் நீட்டி குற்றம் சாட்ட உரிமை இல்லை.

காஷ்மீர் வன் முறையில், 1,700 பாதுகாப்பு படையினர் காயம் அடைந்ததன் மூலம், அவர்கள் எவ்வளவு சுயகட்டுப்பாடுடன் நடந்து கொள்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம் என சுஷ்மா சுவராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆப்கானிஸ்தான் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு பிரதமர் மோடி,ஜனாதிபதி பிரணாப் கடும் கண்டனம்





ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள தெஹ மஸங் சதுக்கத்தில் சிறுபான்மை ஹசாரா சமூகத்தினரின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. இந்த வெடிகுண்டு தாக்குதலில், சம்பவ இடத்திலேயே 80 பேர் உயிரிழந்தனர்.

207 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி, இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பிரணாப் முகர்ஜி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தை அறிந்ததும், அதிர்ச்சி அடைந்தேன். இது என்னை சோகத்தில் ஆழ்த்திவிட்டது. இந்த சம்பவத்தை நிகழ்த்தியவர்களுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். வெடிகுண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்கிறேன். ஆப்கானிஸ்தான் மக்களுக்கும், அந்நாட்டு அரசிற்கும் இந்திய அரசு எல்லாவித உதவிகளையும் செய்ய தயாராக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)

# காபூல் வெடிகுண்டு தாக்குதலுக்கு சோனியா காந்தி கடும் கண்டனம்

(டில்லி)

ஆப்கானிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படை வெடிகுண்டு தாக்குதலுக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,



அமைப்பு ரீதியான, முட்டாள் தனமான தாக்குதல்கள் உலகின் பல்வேறு நகரங்களில் அரங்கேறி வந்து கொண்டிருக்கின்றன. பிரிவினைவாதம் மற்றும் பயங்கர வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இணைந்து செயற்படுவதே இதற்கு தீர்வு. ஆப்கானிஸ்தான் மக் களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கல் என அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)


# கோத்தபாய விரைவில் கைதாவார்?

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இரண்டு மாதங்களுக்குள் கைது செய்யப்படுவார் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டத்தில் இடம்பெற்ற சில குற்றச்செயல்கள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளின் தொடர்ச்சியாகவே கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படுவார் என்றும் அந்த புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரி



வித்துள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால், சிறைக்குச் செல்லும், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நான்காவது நபராக அவர் இருப்பார்.

ஏற்கனவே ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பசில் ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


# வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதே அரசின் இலக்கு

## ஆளுநர் இந்திரஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

**வெளிநாட்டு முதலீடுகளை எதிர்வரும் காலங்களில் 5 மடங்காக அதிகரிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும் என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசாங்கத்தின் சிறந்த வெளிநாட்டுக் கொள்கையை பயன்படுத்தி சர்வதேசத்துடன் புதிய வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டு முதலீட்டு சந்தர்ப்பங்களை அதிகரித்து, ஏற்றுமதியை அதிகரித்து இலங்கையை பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கையின் அபிவிருத்தி சவால்கள் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஒரு விசேட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் கருவிடம் மன்னிப்பு கோரியது

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு செல்லவிருந்த தமக்கு அனுமதி வழங்காமை குறித்து சபாநாயகர் கரு ஜெயசூரிய, எமிரேட்ஸ் எயார்லைன்ஸ்க்கு எதிராக, ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து நடந்த தவறுக்கு வருந்துவதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

சுகவீனம் காரணமாக அண்மையில் சிங்கப்பூருக்கு செல்லவிருந்த சபாநாயகர், தம்முடன் இலங்கையின் வைத்தியசாலையில் இருந்து விடுகை பத்திரத்தை பெற்று வரவில்லை என்று கூற, எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் அவருக்கான பயண அனுமதியை மறுத்தது.

இதனையடுத்து 10 மணித்தியாலங்களுக்கு பின்னரே அவர் வேறொரு விமானத்தில் சிங்கப்பூருக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றார்.

நோயாளியின் நிலையை கருத்திற்கொண்டு அவருக்கான பயண அனுமதியை தமது நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த நிலையில் கரு ஜெயசூரியவின் நிலையைக் கருத்திற்கொண்டே அவருக்கான பயண அனுமதியை மறுத்ததாக எமிரேட்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் ஏற்பட்ட இடையூறுகளுக்கு வருத்தத்தை வெளியிட்டுள்ள எமிரேட்ஸ் நிறுவனம், நோயால் பாதிக்கப்பட்டிருந்த சபாநாயகரின் நலனைக் கருத்திற்கொண்டே அவருக்கான பயண அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. (இ-5)

# நீதி மறுக்கப்படுமாகவிருந்தால் வீதியிலிறங்கிப் போராடுவோம்

## தாஜுடீனின் பெற்றோர் எச்சரிக்கை

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட றக்பி வீரர் வஸிம் தாஜுடீனின் கொலை தொடர்பான விசாரணைகள் மறைக்கப்படுமானால் அதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடப் போவதாக தாஜுடீனின் குடும்பத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நடைமுறையில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்ற போதும் ஏனைய விசாரணைகளை போன்று தேக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தமக்கு ஏற்பட்டுள்ளதாக தாஜுடீனின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரசியல் அழுத்தங்கள் காரணமாக இந்த விசாரணைகள் பின்னுக்கு தள்ளப்படக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் தாஜுடீனின் கொலை தொடர்பில் நீதி நிலைநாட்டப்படாது போனால் தாம் வீதியில் இறங்கி போராடப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (இ-5)



## இன்று ஒரு தகவல்

### பெண்களை ஆளும் வழி

ஒரு பெண் ஓர் ஆணுக்கு பின்னணியாக இருந்தால் அவனால் எதையும் சாதிக்க முடியும். எதிரணியாகச் செயற்பட்டாலோ அவனால் எதையுமே சாதிக்க முடியாது.

ஒவ்வொரு வெற்றிகரமான ஆணுக்குப் பின்னும் ஒரு பெண் காரணமாகியிருக்கிறாள் என்று சொன்னவன் பைத்தியக்காரனில்லை. ஒரு பெண் தன்னுடன் சம்பந்தப்பட்ட ஆணுக்கு ஒத்துழைப்பை நல்காத போது அவனுக்கு ஏற்படும் மன உளைச்சலைச் சொல்லி முடியாது.

நீ இதில் தலையிடாதே ; உனக்கு என்ன தெரியும்? அதைக் கேட்க நீ யார்? என்பன போன்ற உத்தரவுகளையும் கேள்விகளையும் தவிர்ப்பது தான் அவர்களை ஆள்வதன் முதற்படி.

மேற்கூறிய உத்தரவுகளையும் கேள்விகளையும் போடுவதன் மூலம் நாம் அவர்களை சுலபமாக ஆளலாம் என்று நம்புபவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளட்டும். மாறாக, அவர்களை ஆள்வதைப் படிப்படியாகத்தான் மேற்கொள்ள வேண்டும்.

பலர் முன்னால் அவர்கள் பத்திரகாளி ஆட்டம் போடுவதையோ , தன் கை ஓங்கியுள்ளது என்பதைக் காண்பித்துக் கொள்ளவோ ஆண்கள் அனுமதியளிக்கக் கூடாது. உன் கருத்தை நான் ஏற்கிறேன். ஆனால், அதைப் பலர் முன் செய்யச் சொல்ல உனக்கு அனுமதியில்லை என்பதைத் தெளிவுபடுத்திவிட வேண்டும். அதற்குக் காரணம் சொல்லும் போது அதில் எனக்கு கௌரவமும் இல்லை, உனக்குப் பெருமையும் இல்லை என்பதாகச் சொல்லலாம்.

பெண்களுக்கென்று சிறு சிறு ஆசைகள் உண்டு. அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டியது ஆண்கள் கடமை. பெரிய பெரிய ஆசைகளைப் பூர்த்தி செய்ய இயலாத போது மாட்டேன், முடியாது என்பது போல் ஹிட்லர் பாணியில் சொல்லாமல், ஏன் முடியாது, ஏன் மாட்டேன் என்கிறீர்கள் என்பதை அவர்களே ஏற்கும் படியாக விளக்க வேண்டும்.

நம்மை மதிப்பதில்லை, நம்மிடம் பிரியம் காண்பிப்பது இல்லை என்பதால் மனக்குறை பெண்களுக்கு அடிக்கடி ஏற்படுவது இயல்பு. சிலர் இந்த உணர்வை நேரடியாகச் சொல்ல மாட்டார்கள். அதற்கு எதிர்ப்பதமாகச் செயற்பட ஆரம்பிப்பார்கள்.

இங்கு தான் அது ஆண்களை அடக்கி ஆளும் மன நிலையாக உருவெடுக்க ஆரம்பிக்கிறது.

நாம் சொல்வதைக் கேட்கிறாரோ இல்லையோ, நம் எதிர்ப்பைத் தெரிவித்து விட வேண்டும் என்பதான மன்நிலை அப்போது தான் உருவாகும். இது, ஆண்களின் எண்ணத்தைக் கைகூடாமல் செய்து விடும்.

சிலர், பெண்களிடத்தில் உள்ள நல்ல இயல்புகளை, திறமைகளைப் பாராட்டுவதில்லை. நன்றாக சமைத்திருந்தால் பாராட்ட மாட்டார்கள். சட்டையிலிருந்து விழுந்து தொலைந்து போன ஒரு பட்டனைத் தைத்திருந்தால் பாராட்டமாட்டார்கள். மாறாக சமையல் நன்றாக இல்லாவிட்டாலோ, துணி துவைக்கப்பட்டிராவிட்டாலோ பெரிதாக்கிவிடுவார்கள். இத்தகைய பண்பு பெண்களிடத்தில் வெறுப்பையும் அதிருப்தியையும் வளர்க்கும். இது இவர்கள் சொல்வதையெல்லாம் நாம் ஏன் கேட்க வேண்டும் என்ற மனப் போக்கை வளர்த்து விடும்.

ஆண்களைப் பொறுத்தவரை நிறைவாக ஏதும் செய்யாவிட்டாலும் தங்களிடம் பெரிய குறை ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்வதே பெண்களை ஆளும் வழி.

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

ஆசிரியர்கள்:-சுந்தரலிங்கம் லோகேஸ்வரன், டேவிட் கிஸ்காட்
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்

## தமிழ் பகுதி-I

### பகுதி-I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i)
நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்ப்
பயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச வுயர் கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

அ) இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.
ஆ) தலைவனுக்கு ஏற்பட்டுள்ள துன்பமும் அதனை துடைப்பதற்குரிய வழியும் கூறப்படுவதிலுள்ள சிறப்பினை விளக்குக.
இ) தலைவனது நெஞ்சம் அனுபவிக்கும் நல்லுரையினையும் புல்லுரையினையும் குறிப்பிடுக.
ஈ) சங்ககால புறத்திணைப் பாடற் பண்பிலிருந்து குறித்த பாடல் வேறுபடுவதனை எடுத்துக் காட்டுக.

(ii)
கலைமுகந் தருந்திய புலமைக் காட்சியோ
அலைமுகந் தருந்திய அருள் என்று உன் பணி
கொலைமுகந்' தருந்துயர் கொண்டுஞ் செய்வலென்
உலைமுகந் தருந்தழற் குருதி யேந்தினாள்.

ஏர்வளர் அடிபணிந் திளவ லேந்தலின்
நீர்வளர் குவளைதேன் துளித்தல்நேர் அவன்
சீர்வளர் விழிமலர் சிறந்து முத்துகச்
சூர்வளர் மனத்தவர் துகைத்து ளேங்கினார்.

அ) இச்செய்யுள்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக
ஆ) மரியாள் ஆண்டவன் மீது கொண்டுள்ள பக்தியின் உயர்வினை எடுத்துக்காட்டுக
இ) இச் செய்யுள்களில் கையாளப்பட்டுள்ள உவமான உவமேயங்களை குறிப்பிடுக
ஈ) பாடலில் வந்துள்ள உருவக அணியை விளக்குக

2. "அ" பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக் களுக்கு விடைதருக

அல்லது

"ஆ"பகுதியிலுள்ள உரைப்பகுதியைப்படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக

அ)
ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தா னொரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே – அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தையுழுவான் நிலத்தினிலே – தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பையிழுக்கும் மாட்டுடனே – அவன்
காலங் கழித்தான் கண் கலங்கி

உண்பது முடுப்பதும் வயலதனிலே – அவன்
உறங்கிக் கிடப்பதும் வயலதனிலே
விண்தான் தனது கூரையென – ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்

உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக் கிடச் சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்

பண்ணை முறையில் பலநூறு – வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்

காட்டை வெட்டி களமாக்கி – அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி – ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டை காப்பவனே – அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க.

I. நாட்டைக் காக்கும் விவசாயி மீது கவிஞர் கொண்ட ஈடுபாடு எவ்வாறு காட்டப்படுகின்றது?
II. வயலுக்கும் விவசாயிக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பினை கவிஞர் எவ்வாறு வெளிக்காட்டுகின்றார்?
III. "நாட்டின் இறைவன் விவசாயி ஏன் நன்றி மறந்தாய் முதலாளி" என்பதன்மூலம் எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றத்தினை விளக்குக?
IV. 'உழவர்களை இறைவன்' என குறிப்பிடப்படுவதிலுள்ள பொருத்தப்பாடு எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது?

அல்லது

ஆ)
"ஆமா! இந்தப் 'பொட்டைச்சி'களுக்கு இன்னைக்கு என்ன வந்தது?" கடைசி நிறைக்கு வந்து நின்றாள். அந்த மலைகளிலேயே கடைசி நிறை. எல்லோரும் சேர்ந்து ஏதோ அவளை ஒதுக்கிவிட்டது போன்ற தனிமை உணர்வு அவளது மனதைப் பிழிய, கூடையை இறக்கி வைத்து இடையில் கட்டியிருந்த படங்குச் சாக்கை அவிழ்த்து, சேலையைச் சற்று முழங்காலுக்கு மேலே தூக்கி - இல்லாவிடில் தேயிலைச் செடி கிழித்துவிடுமே! மீண்டும் படங்கைச் சுற்றிக் கட்டினாள். கறுப்பு நிறக்கயிறு அரைஞாண் மாதிரி இடுப்பைச் சுற்றி வளைத்தது. கூடைக்குள்ளிருந்த தலைத்துண்டை உதறி, நெற்றியில் பூசிய இரட்டைக் கோடு விபூதி அழியாமல் தலையில் போட்டுக் கொண்டு கூடைக்கயிற்றையும் தலையில் மாட்டிக் கொண்டாள். கடைசியாகப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த தலைத் துண்டின் பகுதிகளைக் கயிற்றை மறைப்பது போல் மடித்துக் கயிற்றுமேல் போட்டுக் கொண்டாள். ஆயிற்று நிரைக்குத் தயார்! அப்போதுதான் அவளைக் கவனித்த பக்கத்து நிறைக் கிழவி தன் பொக்கை வாயைப் பிளந்தாள்.

"என்னடி ஆயா அதிசயமா இருக்கு! என்ன இந்தப் பக்கமாக காத்து வீசுது?" கிழவியை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, சூழ்கொட்டிக் கொண்டாள்

"என்னடி குட்டி கேக்குறேன் ச்சுங்குறே?"

"ஒண்ணுமில்லே அம்மாயி! சும்மாதான் வந்தேன்"

"ஆயாயே! பொல்லாதவதான் சும்மா கூடவரா ஆளு இல்லே நீ, என்ன தான் நடந்தது?" லெட்சுமிக்குக் கோபம் வந்துவிட்டது

"ஒப்புராணை! ஒண்ணுமில்லேங்கிறேன்"

"சரி....சரி.. காலாங்காத்தாலே ஆணையிடாதே!"

மௌனமாகத் தேயிலைச் செடியைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு, பனியில் நனைந்து நின்ற கொழுந்துகளைக் கிள்ளத் துவங்கினாள் லெட்சுமி, இரண்டு விச்சிலே இரண்டு கையும் நிறைந்து விட்டது. காம்புப்பகுதியைத் திருப்பிப் பார்த்தாள். பரவாயில்லை எல்லாம் பிஞ்சுக் காம்புதான்! 'நார்க்குச்சி' ஒன்று கூட இல்லை. கிழவியை திரும்பிப்பார்த்தாள். அப்போது தான் கிழவி ஒவ்வொன்றாக மெல்ல மெல்ல கிள்ளிக் கொண்டிருந்தாள். காலைப் பனிக்கும், குளிருக்கும் அவள் கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தது.

"அம்மாயி! பொலி சொல்றியா கொழுந்தைப் போட்டுக்கிரேன்.." முதல் பிடிக் கொழுந்தைக் கூடைக்குள் போடும் போது 'பொலி' சொல்வது ஒரு மரபு. சகுனம் பார்ப்பது மாதிரி! கிழவி 'பொலி' சொன்னாள்.

"போடு அப்பனே, சம்முகா! பொலியே.. பொலி – பொலி – பொலி"

1. 'லெட்சுமி' என்ற பாத்திரத்தின் மனக்கொதிப்பும் தனிமையுணர்வும் அப்பாத்திரத்தின் மூலம் எவ்வாறு வெளிப்படுகின்றது?
2. தனிமையுணர்வு லெட்சுமியினை வாட்டினும் அவளின் ஆளுமைப் பண்பு சித்திரிக்கப்படுவதனை எடுத்துக்காட்டுக
3. இந்த உரைப்பகுதியிலுள்ள "உரையாடற்' சிறப்பினை விளக்குக.
4. இந்த உரைப்பகுதியில் 'கிழவி' எனும் பாத்திரப்படைப்பிலுள்ள சிறப்பம்சங்களைத் தருக.

### பகுதி – II

3. வினை செயல்வகை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக.
அ) பொது வகையினால் வினை செய்யும் திறன்
ஆ) வலியான் வினை செய்யும் முறை
இ) காரியத்தை நிறைவேற்றும் செயல் வகை
ஈ) மெலியான் வினை செய்யும் திறன்

4. கைகேயி சூழ்வினைப்படலத்தில் கைகேயி வரத்தினைக் கேட்டதுமுதல் இராமனை காணும் ஆசையினால் மாதர் படுக்கையினின்றும் எழுதல் வரையான பகுதியில்
அ) கைகேயி கேட்டவரம் கொடிய வரமாக அமைந்தமையால் தசரதன் அடைந்த துன்பம்
ஆ) 'பரதனுக்கே ஆட்சி உரியது' என்ற கைகேயியின் கருத்திற்கு ஆட்சிமுறை தொடர்பாக தசரதன் கூறும் விளக்கம்
இ) இராமன் காட்டிற்கு செல்வதனை விரும்பாமல் அவ்வரத்தினைத் தவிர்க்குமாறு கேட்கும் தசரதன் நிலைப்பாடு
ஈ) இயற்கை நிகழ்ச்சிகளின் மூலமாக கைகேயியின் இழிகுணம் விளங்குமாற்றை தெளிவுபடுத்துக

5. பைதிரம் நீங்கு படலத்தில்-ஆண்டவனின் கட்டளையினை வானதூதுவன் மூலம் அறிந்த
அ) வளன் அடைந்த நிலை
ஆ) புனித மரியாள் அடைந்த நிலை - என்பன புலப்படுத்தப்படுவதனையும்
இ) திருக்கும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறியபோது இயற்கை அவர்கள் மீது கொண்ட இரக்கம் சித்திரிக்கப்படுவதனையும்
ஈ) திவ்விய பாலன் மீது வீரமாமுனிவர் கொண்ட ஈடுபாட்டினையும் விளக்குக.

6. 'தாய்' என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்
அ) மல்லிகைத்தீவு வாழ்வியல் அம்சங்கள் தாயின் கூற்றாக வெளிப்படுத்தப்படும் விதம்
ஆ) "என்ர சதுரத்தச் சாறாப்புழிஞ்சென்றாலும் நான் உனக்குப்பணம் அனுப்புவன்" என்னும் தாயின் கூற்று நிதர்சனமாகக் காட்டப்படுதல்
இ) 'வாத்தியார்' என்னும் பாத்திரப்படைப்பு இக்கதையில் பெறும் முக்கியத்துவத் தினை மதிப்பிடுக.
ஈ) "எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசக் குடுத்து அனுப்பியிருக்கா" இக்கூற்று இடம்பெறும் சந்தர்ப்பத்தினையும் இது கதையில் பெறுகின்ற முக்கியத்துவத்தினை யும் கூறுக.

7. தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்ச் செல்வாக்கு என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக
அ) இந்தியாவிற்கு வெளியே தமிழ்ச் செல்வாக்கு பரவலடைந்தமைக்கான காரணங்கள்
ஆ) நாயன்மார்களும் ஆழ்வார்களும் கண்ட பக்தி நெறி இந்தியா முழுவதும் மட்டுமன்றிக் கீழைக்கடல் நாடுகளிலும் பரவியவிதம்
இ) தொலைகிழக்கு நாடுகளில் தமிழரசர்கள் அரசியல் தொடர்பு கொண டிருந்தார்கள் என்பதனை நிரூபித்துக் காட்டும் கட்டுரையாசிரியரின் நுட்பம்
ஈ) கட்டுரையாசிரியரின் ஆராய்ச்சித்திறன் எவ்வாறுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுக

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ) மழை அழைப்பித்த படலத்தில் சுலைக்கு எனும் நபி தோழர் நபிக்குக் கூறிய வறட்சியின் நிலை
ஆ) பெரியாழ்வார் திருமொழியில் - 'நிராட்டம்' பதிகத்தின் மூலம் பெரியாழ் வாரின் வைஷ்ணவ பக்தி வெளிப்பாடு
இ) பாரதிதாசனின் பத்திரிகை என்ற கவிதையில் பத்திரிகை பற்றிய கருத்துக்கள்
ஈ) கம்பதாசனின் தொழில் என்ற கவிதையின் கவர்ச்சியாற்றல்
உ) நீண்ட பயணம் நாவலில் வள்ளி - கற்பகம் - சரஸ்வதி பெண் பாத்திரப்படைப்புக்கள்

16 ஆம் பக்கம் பார்க்க

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## தமிழ் பகுதி II

### பகுதி-I

01.

அ)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அண்ண மூக்கொலி
(1) ம் (2) ன் (3) ப் (4) ஞ் (5) ண்

1.2 பின்வருவனவற்றுள் மேல் இதழ்குவி பின்னுயிர் நெடில்
(1) ஈ (2) ஏ (3) ஊ (4) ஆ (5) ஓ

1.3 பகரம் வேறுபட்டு உச்சரிக்கப்படும் சொல்
(1) அபயம் (2) ஆபத்து (3) வீழ்பவர் (4) பன்மை (5) சார்பு

1.4 பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்று வந்துள்ள சொல்
(1) மடலை (2) கடலை (3) படலை (4) விடலை (5) சுடலை

1.5 வந்தான் - என்ற சொல்லின் சரியான பகுப்பு
(1) வா+ந்+த்+ஆன் (2) வா+த்+த்+ஆன் (3) வா+ந்+ந்+ஆன்
(4) வந்து+த்+ஆன் (5) வ+ந்+த்+ஆன்

1.6 பின்வருவனவற்றுள் செயப்பாட்டுவினை விகுதியாக அமைவன
(1)வி, பி (2)தல், த்தல் (3) க,இய
(4) உண், ஆ (5)படு, அல்

1.7 வகர உடம்படுமெய்யினை பெற்று வரத்தக்க சொல்
(1)பழி (2)ஈ (3) பூனை (4)களி (5) பல

1.8 கன்று ஓடாது - என்ற ஒன்றன்பால் எதிர்மறையின் பலவின்பால் எதிர்மறை வடிவமாக கொள்ளத்தக்கது.
(1)கன்று ஓடா (2)கன்றுகள் ஓடாது (3) கன்றுகள் ஓடா
(4)கன்றுகள் ஓடாதன (5)கன்று ஓடாதன

1.9 அப்பா ஊரிலிருந்து வந்தார் - இதில் இருந்து என்பது
(1)பெயரெச்சம் (2) வினையெச்சம்
(3)உடன்பாட்டு வினை (4)சொல்லுருபு (5) துணைவினை

1.10தேடு – என்ற வினையடியாக கொண்டு பிறக்கும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவம்
(1)தேடும் (2)தேடி (3)தேடிய
(4)தேட (5)தேடினால்

1.11 தா – என்ற வினையடியாகக் கொண்டு பிறக்கும் பெயர்ச்சொற்தொகுதி
(1)தந்தான், தரல், தருதல் (2)தரல், தருதல், தந்தவன்
(3)தருதல், தரல், தரும் (4)தருவான், தந்தான், தருகின்றான்,
(5) தடல், தடுத்தல், தருதல்

1.12அடுத்த விநாடி தன் சுபாவப்படி நிதானமாக மகனின் முகத்தைப் பார்த்தவாறு அமைதியாக யோசித்தாள் பாட்டி - இதில் வந்துள்ள நிதானமாக என்பது
(1)பெயரடை (2)பெயரெச்சம் (3)வினையடை
(4)கூட்டுவினையடை (5) பண்புப்பெயர்

1.13 பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியம்
(1) பல்கலைக்கழக நிர்வாகம் மோதலை நிறுத்த வேண்டும்
(2) பல்கலைக்கழக நிர்வாகம் மோதலை நிறுத்தப்படவேண்டும்
(3) மோதல்கள் பல்கலைக்கழக நிர்வாகம் நிறுத்த வேண்டும்
(4) பல்கலைக்கழக நிர்வாகத்தால் மாணவர் மோதல்கள் நிறுத்தவேண்டும்
(5) மாணவர் மோதல் பல்கலைக்கழக நிர்வாகத்தால் நிறுத்தப்படவேண்டும்

1.14 மழைமேகம் கருக்கொண்டது – என்னும் வாக்கியம் தொடர்பான தவறான கூற்று
(1) மழை எழுவாயாகும்
(2) மழை மேகம் என்பது கூட்டுப்பெயர்
(3) கரு முற்றியலுகரச் சொல்லாகும்
(4) மழைமேகம் எழுவாயாகும்
(5) ஐகாரக் குறுக்கம் காணப்படுகின்றது.

1.15 பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியம்
(1) சுமனும் அப்பாவும் கடைக்குப் போனார்கள்
(2) சுமன் அப்பாவுடன் கடைக்குப் போனான்
(3) சுமன் கடைக்குப் போயிருந்தான்
(4) சுமன் சாமன் வாங்கக் கடைக்குப் போனான்
(5) சுமன் கடைக்குப் போய் வந்தான்

1.16 நேரசையாக கருதமுடியாதது
(1) ஊ (2) இ (3) பல் (4) தாள் (5)முறி

1.17 பாண் - இங்கே வா என்பது
(1) தனியாகு பெயர் (2)பொருளாகுபெயர் (3) கருவியாகுபெயர்
(4) சினையாகு பெயர் (5) கர்த்தாவாகுபெயர்

1.18 செய்வினையின் மூடு என்ற அடிச்சொல் செயப்பாட்டு வினையில் பெறும் மாற்றம்
(1) மூடும் (2) மூட (3)மூடி (4)மூடினால் (5) மூடு

1.19 மாலா நீ எங்கே வேகமாகப் போகிறாய் - இதில் வாக்கிய உறுப்பு அல்லாதது
(1) நீ (2) வேகமாக (3)மாலா
(4)போகிறாய் (5) எங்கே போகிறாய்

1.20 ஒன்பது மாகாணங்களும் போட்டியில் கலந்துகொண்டன. உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்.
(1) எதிர்மறை (2) முற்றுப்பொருள் (3) எண்ணுப்பொருள்
(4) எச்சப்பொருள் (5) ஈற்றசைப் பொருள்

1.

(ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை எழுதுக.

01. செயப்படுபொருள் வேற்றுமையினை உதாரணம் தந்து விளக்குக
02. குற்றியலுகரம் - முற்றியலுகரம் உதாரணம் தந்து வேறுபடுத்தி விளக்குக
03. தன்வினை, தனிவினை உதாரணம் தந்து விளக்குக
04. கூட்டு வாக்கியம் எவ்வெவ் வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக
05. உவமைத் தொகை என்றால் என்ன? அதன் வகைகளை குறிப்பிடுக

02.

(அ) பின்வரும் உரைப் பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக

பண்பாட்டுக்குப் பண்பாடு, கலை வடிவங்கள் பெறும் முதன்மை வேறுபடினும் எல்லாப் பண்பாடுகளிலும் அரங்கு உண்டு. தமிழ்ப் பண்பாட்டிலும் முக்கியமான இடத்தை அரங்கு வகித்து வந்துள்ளது. அதாவது அரங்கு ஓர் மக்கள் இணைப்புச் சாதனமாக நமது மரபில் அங்கம் வகிக்கின்றது. இது மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொதுவாக பொருந்துகின்ற ஒரு நிலையாகும். எனவே அரங்கு மக்களுக்கு பரிச்சயமான ஒரு கலைவடிவம்.

இன்றைய நவீன உலகில் வேறு சிறப்பான கலைவடிவங்களான சினிமா, தொலைக்காட்சி போன்றவை இருக்கும்போது இன்னமும் "அரங்கு", "அரங்கு" என ஆரவாரம் செய்வதேன் எனப் பலர் வினவுதல் கூடும். எம்மிடையே இருந்த நாடகங்களைமீறி சினிமா மேலெழுந்து செல்வாக்குள்ளதாகி விட்டது என்பது இவர்கள் வாதம். ஆனால் பொருட்செலவில் வேண்டி நிற்கின்ற சினிமாவும் தொலைக்காட்சியும் இன்னமும் செல்வந்தர்களின் கைகளிலேயே இருக்கிறது என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். சினீமாவும், தொலைக்காட்சியும் பிரதானமாக கைத்தொழில்களே. இவை பாரிய தேசிய அல்லது பல்தேசிய நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன. ஆனால் இத்தகைய நவீன தொடர்புச் சாதனங்களுடன் ஒப்பிடுகையில் அரங்கு, இலகுவில் கையாளப்படத்தக்கதாகவும் பெரும் தயாரிப்புச் செலவு அற்றதாகவும் உள்ளது. இதனால் பரந்துபட்ட வறிய மக்களுக்கு ஒரு கட்டுப்படியான தொடர்பு முறைமையாக விளங்குகின்றது. இவர்களால் அரங்கில் ஆற்றவும் முடியும். அரங்கைப் பார்க்கவும் முடியும். இந்த வகையில் அரங்கு மக்களிடம் இருந்து அந்நியப்படாத மக்களின் கைகளிலேயே இருக்கக்கூடிய சனநாயக வடிவமாகும்.

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

மக்கள் தம் மூதாதையர்களைப் பற்றி, நினைவுகூரும் பழக்கத்தை நாகரிக வளர்ச்சியின் முதற்கட்டத்திலேயே கொண்டிருந்ததால் மூதாதையருக்கு நினைவுச்சின்னங்கள் எழுப்பும் பழக்கம் இருந்தது. இறந்தவர்களின் உடல்களை புதைப்பதும் அங்கு நினைவுச்சின்னம் எழுப்புவதும் உண்டு. பிறகு, அவர்களில் சிறப்பாக வாழ்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பழக்கமும் வந்தது. அவற்றையே நாம் பழங்காலக் கதைகள், புராணங்கள் என்று போற்றுகிறோம். சிறப்பாக வாழ்ந்தவர்களைப் பற்றி அவர்களை தெய்வங்களாக வழிபாடு செய்யும் பழக்கமும் இருந்ததை அறிகிறோம். அவ்வாறு போற்றப்படுபவர்களின் நினைவுச்சின்னங்கள் காலப் போக்கில் கோயில்களாக மாற்றப்பட்டும் இருக்கக்கூடும். இவ்வாறான பழக்கத்தையும் நாம் கல்வெட்டுக்களில் காண்கிறோம். நாட்டை ஆண்ட அரசர்களின் பரம்பரையை விளக்கும் வழியில் வரிசையாக ஒவ்வொரு மன்னரும் ஆட்சி செலுத்திய வரலாறு தொடராக எழுதப்பட்டு நாட்டு மக்களின் வரலாறாக எழுதும் பழக்கம் நம் நாட்டில் அண்மையில்தான் வந்தது. ஆனால் பல வெளிநாடுகளில் சிறப்பாக சீனாவிலும், பல மேலை நாடுகளிலும் தொடர் வரலாறுகள் பலநூறு ஆண்டுகளாகவே எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இந்நிலையில் அரச வரலாறு மட்டுமல்லாது மக்களின் வாழ்வியலின் கடந்த காலம் அனைத்தும் வரலாறாக எழுதப்படவேண்டிய ஒன்றாகும். சமய வரலாறு, பண்பாட்டு வரலாறு, இலக்கிய வரலாறு, மொழி வரலாறு என்பன யாவும் முறையாகப் பேணப்படவேண்டும். இல்லாவிடின் வரலாற்றினை அறிதவதென்பது சிரமமானதாகும். வரலாறு யாவற்றினையும் பெறுவதன் மூலமே, வாழ்வியலின் அனைத்து அர்த்தப் பிரமாணங்களையும் அறிய முடிகிறது.

01. வரலாறு எழுவது எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பது எவ்வாறு வெளிப்படுகிறது?
02. வரலாறு பேணவேண்டிய அவசியம் யாதெனக் கூறப்படுகின்றது?
03. வரலாற்றினை எவ்வாறு வகைப்படுத்தலாம்? வரலாற்றினை அறிவதன் பயன்?

02. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ. மனித வாழ்வும் பண்பாடும்
ஆ. நாட்டார் இலக்கியம்
இ. உலகமயமாதலும் தமிழ்க் கல்வியும்
ஈ. போதைப்பொருளை ஒழிப்போம்
உ. பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தமிழ்ப் பணிகள்

### பகுதி-II

#### பிரிவு 'அ'

03.

அ) சங்ககாலத்தில் எழுந்த புறத்திணை சார்பான இலக்கியங்களை தருக
ஆ) சங்ககால புறத்திணை மரபின் தொடர்ச்சியாக பிற்காலத்தில் இலக்கியங்கள் தோற்றம் பெற்றதை விளக்குக
இ. சங்ககாலத்தில் திருமுருகாற்றுப்படை பெறும் இடத்தினை மதிப்பிடுக
ஈ) சங்ககால 'களவு ஒழுக்கம்' அகத்திணைப் பாடல்களில் முக்கியம் பெறுவதையும் பிற்கால இலக்கியங்களில் அதன் செல்வாக்கும்

04.

அ) சோழர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களைத் தருக.
ஆ) சோழர் காலக் காவியங்களில் பல்லவர் கால இலக்கியங்கள் ஏற்படுத்திய செல்வாக்கினை விளக்குக
இ) சோழர்காலக் காவியங்கள் பற்றி சுருக்கமாகக் கூறுக
ஈ) இக்கால இலக்கண முயற்சிகளின் சிறப்புக்களை எடுத்துரைக்குக

05.

அ) நாயக்கர் கால இலக்கியங்களின் முனைப்பான பண்புகளை 'தருக
ஆ) அக்காலத்தில் ஏற்பட்ட புதிய தமிழ் இலக்கிய முயற்சிகளை குறிப்பிட்டு விளக்குக
இ) பழைமை போற்றும் பண்பு மேலோங்கியிருப்பதை பரிசீலிக்குக

#### பிரிவு 'ஆ'

06. ஐரோப்பியர் ஆட்சிக் காலங்களில் ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுவதனை
அ) நாடக இலக்கியங்க்ள்
ஆ) அறிவியல் நூல்கள்
இ) அகத்திணை மரபு
ஈ) சிற்றிலக்கிய வளர்ச்சி -என்பனவற்றின் மூலம் விளக்குக

07. மேல்வருவோரில் யாரேனும் மூவரின் இலக்கிய பங்களிப்பினை மதிப்பிடுக
அ) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
ஆ) பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
இ) கவிஞர் நீலாவணன்
ஈ) சி.வை. தாமோதரம்பிள்ளை
உ) முகம்மது காசிம் சித்திலெப்பை

★ சாதனை மிக்க பெறுபேற்றினைப் பெற வாழ்த்துக்கள்!
★ விடாமுயற்சி-தன்னம்பிக்கை-வெற்றி தரும்!

◆◆◆

## அரசுக்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சியின்

# நடைபவனிக்குத் தடை உத்தரவு பெறத்திட்டம்

### கெஹலிய எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்யும் நடைபவனியை நிறுத்துவதற்கான நீதிமன்றத் தடை உத்தரவை பொலிஸ் அல்லது மக்களை வைத்து பெற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராகி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல குற்றம் சாட்டியுள்ளார்.

## நிதிமோசடிப் பிரிவையும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவையும் இணைக்கத் திட்டம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் குடும்பத்தினர் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள 58 குற்றச்சாட்டுக்கள் குறித்து நிதிமோசடிப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நிதிமோசடிப் பிரிவினர் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபாலவையும் பிரதமர் ரணிலையும் சந்தித்த போது இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த கலந்துரையாடலின் போது முக்கிய அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நிதிமோசடி தடுப்பு பிரிவினரின் விசாரணை முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வரை 493 முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன. இதில் 15 விசாரணைகள் குற்றப் புலனாய்வுத்துறையினரால் முன்னெடுக்கப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நிதி மோசடிக்கு எதிரான விசாரணைப் பிரிவையும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவையும்இணைப்பது தொடர்பான சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இதன்போது குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த முடியும் என்று அரசாங்கம் எதிர்ப் பார்க்கிறது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 789


சிந்து



நேகா




அச்சு




உ.பிரசன்னா




அபிஷ்ணவி




ஜீவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கேள்வி கேட்டால் பிரச்சினை நிர்மால் ரஞ்ஜித் விளக்கம்

சில அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகள் குறித்து கேள்வி கேட்டால் பிரச்சினை ஏற்படுகின்றது எனவும். இதுவே தனக்கு அறிவிப்பு வழாங்காமல் பதவி நீக்கம் செய்வதற்கு காரணமாக இருந்திருக்கும் எனவும் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாக சபையிலிருந்து பேராசிரியர் ஜயதேவ உயன்கொட மற்றும் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

இதற்கான கடிதங்கள் அவர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரண்டரை மில்லியன் ரூபா செலவில் கண்டியில் செயலமர்வொன்றை நடத்தியுள்ளது. இதற்கு நிர்வாகக் குழுவின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. இது குறித்து வினவியபோது பிரச்சினைகள் எழுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஹக்கீமுக்கு எதிரான பிரிவினர் விரைவில் கட்சி ஒன்றை பதிவு செய்ய தீர்மானம்



அமைச்சர் ரவூப் ஹக்கீமின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்துள்ள தாம் விரைவில் புதிய கட்சி ஒன்றை பதிவு செய்ய தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் எழுச்சி என்ற பெயரில் ஹக்கீமின் அதிருப்தியாளர்கள் தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

இது தனியாக முஸ்லிம்களின் அபிலாஷைகளை நோக்காகக் கொண்டு இயங்கும் கட்சியாக இருக்கும் என்று சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஹக்கீமின் கொள்கையுடன் முரண்படும் பலர் புதிய அரசியல் முன்னணியில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தமது அரசியலை தனிப்பட்ட வாழ்க்கைக்காக பயன்படுத்தி வருகிறார்.

முஸ்லிம்களுக்காக குறிப்பாக கிழக்கின் முஸ்லிம்களின் நலன்களை அவர் புறந்தள்ளி வருகிறார் என்றும் இஸ்ஸதீன் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 90 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 500 |
| தக்காளி | 160 | 200 | 120 | 160 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 140 | 80 | 100 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 120 | 160 | 160 | 160 |
| கரட் | 180 | 300 | 150 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 | 120 | 150 |
| புடோல் | 60 | 100 | 80 | 70 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 140 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 180 | 400 | 150 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | — | 200 | 140 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 40 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 200 | 120 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 100 | 160 | 120 | 160 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 320 | 300 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 350 | 320 | 300 | 400 |
| போஞ்சி | 180 | 200 | 130 | 160 | 200 | 200 |
| கத்து[illegible]ள்ளை | 100 | 100 | 100 | 60 | 100 | 100 |
| கீரை [illegible]டி | 30 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்கா[illegible] | 120 | 100 | 100 | 120 | 200 | 100 |
| தேங்[illegible](ஒன்று) | 35 | 40 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இர[illegible]ளி | 180 | — | 150 | — | — | 160 |
| வெ[illegible]ப்பூ | 150 | 100 | 130 | 140 | 200 | 150 |
| முள்ளங்கி | 50 | 100 | 50 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 30 | 60 | 80 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## மன்னார் பகுதியை இராணுவம் கைப்பற்றியது 235

**விவாதம்**

நாங்கள் தென்பகுதியில் உள்ள எந்த அரசியல் கட்சிகளுடனும் மகிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமாக ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை. சில கட்சிகள்தான் தங்களது வெற்றிக்கு எங்கள் இயக்கத்தின் பெயரை பயன்படுத்திக்கொண்டன என்பது தான் உண்மை.

மகிந்த ராஜபக்ஷ எங்களுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். எங்களுக்கு கணிசமான பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு குறித்து ஏற்கனவே 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் விவாதம் நடந்துள்ளது. அந்தப்புகார் குறித்து விசாரிக்க ஒரு பாராளுமன்றக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

**கப்பல் மூழ்கடிப்பு**

.07-10-2007 அன்று காலையில் விடுதலைப்புலிகளின் மட்ஷிமா என்ற 70 அடி நீளம் கொண்ட கப்பல் இந்து மகா சமுத்திரத்தில் இருந்து வன்னிப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக கடற்படைக்கு தகவல் கிடைத்தது. டோண்ட்ரா என்ற இடத்தில் நடுக்கடலில் அந்தக் கப்பலை கடற்படையின் மூன்று கப்பல்கள் வழிமறித்து அதிரடி தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் கப்பல் முற்றிலும் அழித்து மூழ்கடிக்கப்பட்டது. அந்தக்கப்பலில் அதி வேகமாகச் செல்லும் படகுகள் ராடர் கருவிகள், ஜி.பி.எஸ்.கருவிகள்,தண்ணீர் ஏவுகணைகள், உளவுக்கருவிகள் போன்றவை ஏற்பட்டு இருந்தன. அவையும் கப்பலோடு சேர்த்து அழிக்கப்பட்டன.

இந்தத் தாக்குதலில் கப்பலில் இருந்த 25 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டதாக கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கொமாண்டர் டி. கே.பி திசநாயக்க கூறியதாவது,

**உளவுப்பிரிவு தகவல்**

விடுதலைப் புலிகளின் வன்னிப் பகுதிக்கு இதுபோல அடிக்கடி ஆயுதங்களையும் கருவிகளையும் கொண்டு வந்து சேர்த்து வருகிறார்கள். அப்படி கொண்டுவரப்பட்ட இந்தக் கப்பலை பற்றி எங்களது உளவுப் பிரிவு கொடுத்த தகவலின் பேரில் எங்களது ரோந்து கப்பல்கள் சயூரா, சாகாரா அதிவேகத் தாக்குதல் நடத்தும் கப்பல் சுரனிமிலா 521 என்ற நவீன கப்பல் ஆகிய கப்பல்கள் அதை மடக்கி தாக்குதல் நடத்தின. இதில் அந்தக் கப்பல் முற்றிலும் அழித்து மூழ்கடிக்கப்பட்டது. அந்தக் கப்பல் எந்த துறைமுகத்தில் இருந்து ஆயுதங்களை ஏற்றி வந்தது என்று தெரியவில்லை. அது பற்றி தீவிரமாக விசாரித்து வருகிறோம்.

**10வது கப்பல்**

11-09-2007 அன்று இது போல ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற 3 கப்பல்களை நாங்கள் அழித்தோம். அதில் 45 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர். கடந்த 10 மாதங்களில் இதுபோல 7 கப்பல்களை கடற்படை அழித்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் இருந்து நாங்கள் நடத்திய தாக்குதலில் அழிக்கப்பட்ட 10 வ்து கப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமாக விடுதலைப்புலிகளின் பெரும்பாலான கப்பல்களை அழித்து விட்டோம் என்றே கூறலாம். இந்தத் தாக்குதலில் எங்களின் 4 கப்பல்களுக்கோ எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இவ்வாறு தசநாயுக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் விமானப் படைத்தளத்தை விடுதலைப் புலிகளின் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் 33 பேர் பலியானார்கள். விமானங்கள் சேதமடைந்தன.

இராணுவத்தினர் மீதான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் விமானங்களைப் பயன் படுத்தினார்கள். இதற்காக செக்கோஸ்லாவிய நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு இலகுரக விமானங்களை விடுதலைப்புலிகள் வைத்திருந்தனர், இந்த விமானங்களைக் கொண்டு தலைநகர் கொழும்பில் உள்ள விமான ப்படை தளத்திலயே தாக்குதல் நடத்தினர்.



இதனால் அதிர்ச்சி அடைந்த அரசு விடுதலைப் புலிகளின் விமானங்களைத் தருமாறு வெளிநாடுகளிடம் கோரி வந்தது.

**விமானப்படைத்தளம்**

இந்த நிலையில், விடுதலைப்புலிகள் மீண்டும் வான் வழி தாக்குதலை நடத்தினர்.தலைநகர் வடக்குப் பகுதியில் உள்ள அநுராதபுரம் விமானப்படை தளத்தின் மீது 22.10.2007 அன்று அதிகாலை குண்டுகளை வீசினர்.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் படையைச் சேர்ந்த 21 பேர் கொண்ட குழுவினர் அன்று அதிகாலை 3.20மணிக்கு அநுராதபுரம் விமானப் படைத்தளத்துக்குள் அதிரடியாக நுழைந்து தாக்கினர். இதனால் அதிர்ச்சி அடைந்த வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையே கடுமையான சண்டை நடந்தது.

ஒரு மணி நேரம் கழித்து புலிகளுக்கு ஆதரவாக அவர்களது இலகுரக விமானங்களும் சரமாரியாக குண்டுகளை வீசின. இந்தச் சண்டை நடைபெற்ற போது இருட்டாக இருந்தது. சண்டை காரணமாக விமானப்படைத் தளத்தில் பயங்கரச் சேதம் ஏற்பட்டது. விமானப்படைத் தளத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

**8 விமானங்கள் அழிப்பு**

இந்தத் தாக்குதலில் 8 விமானங்களும் ஹெலிகொப்டர்களும் அழிக்கப்பட்டதாகப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. அதன் விபரம் வருமாறு,

ஒரு பயிற்சி விமானம் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர்கள் 2, எம்.ஐ.17 ரக விமானம், பி.டி.6 ரக விமானம், பெல் 212ர்க விமானம், சி.டி.எச்.748 ரக விமானம் மற்றும் உளவு பார்க்கும் விமானம் ஆகியுவை ஆகும்.


விமானத்தளத்தின் மீது குண்டுகளை வீசிய விமானங்கள் பத்திரமாக திரும்பி விட்டதாக புலிகள் தெரிவித்தனர். ஒரே நேரத்தில் தரை வழி மற்றும் வான் வழியாக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவது இதுவே முதல் முறை ஆகும்.

இந்தத் தாக்குதலில் அரசுக்கு 160 கோடி இழப்பு ஏற்பட்டது.

**பெண் விடுதலைப்புலிகள்**

அதிக அளவிலான ஆட்களை வைத்திருப்பதற்குப் பதிலாகச் சிறப்பு பயிற்சி பெற்ற கொமாண்டோ அணியினரை விடுதலைப்புலிகள் உருவாக்கினார்கள். அவற்றில் ஒரு படையினரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (தொடரும்)

# வணிக நுட்பம்: வானமே எல்லை!




ஜிம் காலின்ஸ் (JIM COLLINS) என்ற நூலாசிரியர் உச்சம் தொடுவது எப்படி என்று தன்னுடைய முதல் நூலில் கூறியிருந்தார். ஒழுக்கமான நபர்கள், எண்ணம், நடத்தை மற்றும் தொலைநோக்கு பயன்பாடு ஆகியவைகளை காரணிகளாக எடுத்து கூறியிருந்தார். உச்சம் தொட்ட நிறுவனங்கள் அதே அலைவரிசையில் பயணம் செய் யாத காரணத்தால் எவ்வாறு பாதாளத்தில் விழுகின்றன என்றும், வேறு சில நிறுவனங்கள் விழுவதற்கு மறுத்து தொடர்ந்து முன்னேறுவதையும் அடுத்த புத்தகமான பெரு நிறுவனங்கள் எவ்வாறு வீழ்ச்சி அடைக்கின்றன என்ற புத்தகத்தில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

நிறுவன தலைவர்கள் வழிமுறைகளை பின்பற்றினால் வீழ்ச்சியின் வேகத்தை குறைக்கவோ, வீழ்ச்சியை தவிர்க்கவோ முடியும். ஐந்து நிலைகளில் அவைகளை எடுத்து கூறுகிறார்.

* வெற்றியால் அடையும் உச்சகட்ட பெருமிதம்.
* ஒழுங்கு இல்லாத, ஆதிக்கத்தை தேடும் வளர்ச்சி முறைகள்.
* முயற்சியை தவிர்த்து ஆபத்தை விலைக்கு வாங்குதல்.
* முதல் வெற்றியை முன்னிலைப்படுத்தி வீழ்ச்சிக்கு வழிதேடுதல்.
* முக்கியத்துவத்தை இழந்து புதைகுழியில் விழுதல்.

**வெற்றியால் அடையும் உச்ச கட்ட பெருமிதம்.?**

முதலில் அடையும் வெற்றி முற்றாக துணைநிற்கும் என்ற சத்தில்லாத எண்ணத்தினால் வீழ்ச்சிக்கு வழிதேடுகின்றார்கள். அதுபோல் முதலில் வெற்றி அடைந்தவர்கள் திமிர் பிடித்தவர்களாகவும், வெற்றியை பட்டயம் போட்டு பெற்றுக்கொண்டதாகவும் எண்ணும் பொழுது வீழ்ச்சிக்கான கதவு திறக்கப்படுகிறது. வெற்றி பெறும் பொழுது என்ன என்ன நிகழ்வுகள் என்ன என்ன காரணிகள் உண்மையான வெற்றியைக் கொடுத்தன என்பதை மறந்து, தொடர்பில்லாத காரணிகளை இணைத்து வெற்றி விடையை தவறாக கூட்டுகிறார்கள்.

பெருவாரியான வெற்றிகளில் முயற்சி, அதிர்ஷ்டம் மற்றும் இடம் பொருள் ஏவல் ஆகியன வெற்றி கோட்டுக்கு தள்ளிவிடுகின்றன. கடின உழைப்பு மட்டுமே வெற்றியை பெற்று தந்தது என்பது சில நேரங்களில் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாக இருக்கும். தானே முயன்று வென்றதாக நினைப்பவர்கள், மற்றவர்களையும், சந்தர்ப்பத்தையும், சூழ்நிலைகளையும் கணக்கில் கொள்ளாமல் வெற்றி பெருமிதத்தில் துள்ளி திரியும் பொழுது வீழ்ச்சி குட்டையில் தலைகீழாக விழுகின்றார்கள்.

**பேராசை - பேரிழப்பு?**

நிறுவனங்கள் ஒழுங்கான புதுமைகாணும் முயற்சிகளை புறம் தள்ளிவிட்டு ஒழுக்கத்திற்கு மாறான செயல்களை வேகமாகவும், சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தோடும், குறுகிய காலகட்டத்தினுள் மித மிஞ்சிய வெற்றி அடைய வேண்டும் என்ற எண்ணத்தினாலும் விழுந்து விடுகின்றார்கள். நிறுவனங்கள் வளர்ச்சி அடையும் பொழுது முக்கியமான இடங்களில் முக்கியமான பணியாளர்கள் இல்லாதது ஒரு பெரும் குறையாகும். சரியான இடத்தில் தவறான நபர்கள் கட்டுப்பாடு இல்லாமலும், அடக்கம் இல்லாமலும் பணிகளை மேற்கொள்ளும் பொழுது முடிவுகளை வீசி எறிவதன் மூலமும் தோல்வி தவிர்க்க முடியாமல் போகின்றது.

**மோசமான முடிவுகளும் பேராபத்தும்?**

நிறுவன தலைவர்கள் மோசமான மற்றும் எதிர்மறை தரவுகளை நேர்மறை தரவுகளை போல, குழப்பமான விளக்கங்களை கூறுவது ஆபத்தை வலிந்து விலைக்கு வாங்குவதற்கு சமமாகும். தங்கள் பொறுப்புகளை உணர்ந்து கொள்ளாமல், வெளிப்புற காரணிகளை தேக்க நிலைக்கு காரணம் காட்டி தங்களை நுண்ணறிவு மிக்க மேலாளராக வெளிகாட்டிக் கொள்ளும் பொழுது வீழ்ச்சி நேரடியாக வந்து சேர்கிறது.

தேவையில்லாத, தேவைக்கு அதிகமான முயற்சிகளையும் செயல்களையும், பின் விளைவுகளை பற்றி அறியாமல் அதீத முயற்சியின் பேரால் அளவு கடந்து வரிந்து இழுத்துக் கொண்டு செய்யும் செயல்கள் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு நிகரானது ஆகும். அவ்வாறு செய்யும் பொழுது சந்தையில் உள்ள முதலீட்டாளர்கள் நிறுவன வீழ்ச்சிக்கு நிறுவன தலைவர் எந்த எந்த வழிகளில் தன் பங்களிப்பை பெரிதும் அளித்தார் என்பது பற்றி விவாத மேடை அமைக்க தயாராகிறார்கள். மோசமான முடிவுகளும், பெரிய ஆபத்துகளை வரிந்து விலை கொடுத்து வாங்குவதும், நிறுவனங்களை எவ்வளவு வேகமாக வீழ்த்திக் கொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகிவிடும்.

**ஆளைப்பார்த்து மயங்காதே?**

மிகப் பெரிய வெற்றி அடைந்தபின் அதை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இந்த உலகை காக்க வந்த இரட்சகர்களாக தங்களை எண்ணிக் கொண்டு தங்களை ஈர்ப்பு மிக்க தொலைநோக்கு தலைவர்களாக முன்னிறுத்தி கொள்கிறார்கள். மிகவும் தைரியமான ஆனால், பரீட்சித்துப் பார்க்காத் உத்திகளை முன்னிறுத்துகிறார்கள். அதிதீவிரமான மாற்றங்களை முனைந்து ஏற்படுத்துகிறார்கள்.

நாடக பாணியிலான கலாசார புரட்சிகளை அள்ளி தெளித்து, மிகப் பெரிய மிகவும் சாதகமான நம்பிக்கை ஏற்படுத்த கூடிய வகையிலான பொருட்களை உற்பத்தி செய்ய முனைப்பு காட்டுவார்கள். நிறுவனங்களை கையகப்படுத்த மாற்று அல்லது வேற்று வழி உத்திகளை புகுத்துதல் என்று ஒன்றாகவோ, ஒன்றுக்கு மேற்பட்டதாகவோ சில செயல்களை மேற்கொள்ளும்பொழுது அந்த செயல்கள் வெற்றியை எட்டாக் கனியாக்கி வீழ்ச்சியை விரும்பி தழுவச் செய்கின்றன. எனவே முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது தகுந்ததாகவும், தரம் உள்ளதாகவும், நேர்மறையானதாகவும் உள்ளவைகளை முயன்று தேடுதல் வேண்டும். ஆபத்தை விலைக் கொடுத்து வாங்கி தளர்ச்சியையும், வீழ்ச்சியையும் ஈவுகளாக பெறக் கூடாது.

**முக்கியத்துவத்தை மறந்து புதைகுழியில் விழுதல்?**

வளர்ந்து கொண்டே செல்லும் தேக்க நிலைகளும், விலை உயர்ந்த வீழ்ச்சிகளும் நிறுவன்ங்களின் பொருளாதார வலிமையை காயப்படுத்தும். தனிமனித நிறுவன தலைவர்கள் நம்பிக்கை இழந்து ஒளிமயமான எதிர்காலத்தை தவிர்த்து இருளில் யானையைத் தேட ஆரம்பிப்பார்கள். சில நிறுவனங்களில் நிறுவன தலைவர்கள் பணியில் இருந்து வெளியேறுவார்கள். வேறு சில நிறுவனங்களில் நிறுவனத்தையே விற்று விடுவார்கள். மற்ற சமயங்களில் நிறுவனம் முக்கியத்துவத்தை இழந்து பங்குதாரர்களின் வெறுப்பையும் வாடிக்கையாளர்களின் புறக்கணிப்பையும் வலிந்து தேடி வீழ்ச்சி புதைக்குழியில் வேகமாக விழுவதற்கு வாய்ப்பு தேடி காத்திருக்கும்.

சில நேரங்களில் ஆரம்ப கால வெற்றி ஆடிக் காற்றில் காகிதம் பறப்பதை போல வானம் வரை தள்ளும். ஆனால், அந்த காற்று நிலையில்லாததால் காகிதம் விரைவில் குப்பைத் தொட்டியில் கிடக்கும். அதேபோல் நிறுவனங்கள் எதிர்பாராத வாய்ப்புகள் வீசும் பொழுது எங்கு இருக்கின்றோம் என தெரியாமல் உயர பறக்கின்றன. காற்று நிரந்தரம் அல்ல என்றும், மேலே செல்வது கீழே இறங்குவதற்கு தான் என்று நினைத்துக் கூடப் பார்க்காமல் மேலே மேலே செல்ல உத்திகளை தீட்டுபவர்கள் கீழே வெகு வேகமாக சென்று சேர்வார்கள்.

முன்னாளில் எதிர்த்தவர்கள் இந்நாளில் வளர்ச்சிக்கு தேவையானால் கூட்டணி வைத்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால், அவர்களுடைய மனப்பாங்கிற்கும் மதிப்பீடுகளுக்கும் வளைந்து கொடுப்பது தவறானது. நிலையாக நின்று நேர்மறையான செயல்களில் தொடர்ந்து செல்லும் நிறுவனம் மையக் கருத்தை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும் பொழுது அந்த நிறுவனம் வெற்றியை நோக்கி செல்லுமே தவிர வீழ்ச்சியை நோக்கி அல்லவே அல்ல. நிலையான வெற்றியை தேட முயலும் நிறுவன தலைவர்களும், தொழில் முனைவோரும் இந்த புத்தகத்தை ஒருமுறை படித்துப் பார்க்கலாமே.

# வற் 11 வீதமா அல்லது 15 வீதமா அறவீடு?




வற் 11 சதவீதமாக அறவிடப்படுகிறதா அல்லது 15 சதவீதமாக அறவிடப்படுகிறதா என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் தற்போதும் குழப்ப நிலையொன்று காணப்படுகிறது.

மே மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வற் 15 சதவீதமாக அதிகரிப்பட்டிருந்தது. இதற்கமைய வெவ்வேறு பொருட்கள் மற்றும் சேவை களின் விலைகள் அதிகரித்திருந்தன.

குறிப்பாக சுகாதாரத்துறை, தொலைத்தொடர்பாடல் துறை போன்றவற்றில் இந்த வற் அதிகரிப்பு பாவனையாளர்களுக்கு பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச இந்த வற் அதிகரிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். இதன் பிரகாரம் இந்த வற் 15 சதவீதமாக அதிகரித்ததை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் யூலை 11ஆம் திகதி அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் கடந்த 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் வரி வீதத்தை 11 சதவீதமாக குறைத்துள்ளதாக அறிவித்திருந்தன.

ஆனாலும் தற்போதும் சில நிறுவனங்கள் 15 சதவீதமாக வற் அறவிடுவதாக மக்கள் குறைப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலை தொடர்பில் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வற் பிரிவுடன் தொடர்பு கொண்ட போது, யூலை 12ஆம் திகதி முதல் வற் வரி 11 சதவீதமாக அமைந்துள்ளதாகவும், அதன் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வற் அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இந்நிலையை மீறி செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,422.69 | 6,428.77 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,416.30 | 3,428.58 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,139.243

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** கொழும்பு சிற்றி(789.90), ஜே.கே.எச்.(W)(6.90), சிங்கி ஹொஸ்பிட்டல்(2.20)சிங்கபுத்திர பினான்ஸ்(9.60),சிரஸ் ஹிக்கடுவ(15.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சென்ரல் பினான்ஸ்(112.00) கல்மசு(1428.40)புளூ டைமன்ஸ்(2.30)ரேடியன்ட் ஜெம்ஸ்(30.10), இன்டோ மலே(1429.60).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.23 | 147.87 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 190.14 | 196.58 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.02 | 164.05 |
| சுவிஸ் பிராங் | 145.38 | 151.23 |
| கனேடிய டொலர் | 109.39 | 113.75 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.85 | 111.67 |
| சிங்கப்பூர் டொலர் | 105.97 | 109.88 |
| ஜப்பான் யென் | 1.35 | 1.40 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# புலம்பெயர் மக்களின் பலமும் பலவீனமும்!

உலக விடயங்களில் பொதுநலம், சுயநலம் போன்று பலம், பலவீனம் என்பதும் பலரால் பலவிதங்களில் ஆராயப்பட்டுள்ளன.

பொது நலத்தில் சுயநலமா? அல்லது சுயநலத்தில் பொது நலமா? என்பது போல் பலம் பலவீனமாகிறதா? பலவீனம் பலம் ஆக்கப்படுகிறதா? என்ற கேள்விக்கு இன்று உலகில் பதில். கிடைத்ததாக வில்லை.

இலங்கைத் தீவு வாழ் ஈழத் தமிழர், அதாவது, வடக்கு- கிழக்கு மாகாணங்களைத் தமது தாயகமாகக் கொண்ட தமிழர்களது கலை , கலாசாரம், வாழ்வாதாரம் என்பவை ஓர நீண்ட சரித்திரத்தைக் கொண்டவை என்பதை இங்கு எழுதி விபரிக்க வேணடிய அவசியமில்லை.

காலனித்துவ ஆட்சியாளரான பிரித்தானியரிடமிருந்து இலங்கைத்தீவு சுதந்திரம் பெற்ற தினத்தில் ஆரம்பமாகிய தமிழ் மக்களது அரசியல் உரிமை, அரசியல் அபிலாசைகளுக்காக போராட்டம் இன்றுவரை தொடர்கதையாக சென்று கொண்டிருக்கிறது.

சாத்வீக போராட்டத்தில் வெற்றி காண முடியாத நிலையில், ஆயுத போராட்டம் ஆரம்பமாகியது என்பது சரித்திரம்.

சாத்வீகத்தினால் சாதிகக முடியாதவற்றை ஆயுதப் போராட்டத்தினால் வெற்றி கண்டதுடன், தமிழர்களது தாயக பூமியான வடக்கு-கிழக்கில் ஏறக்குறைய 75 வீதமான நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள், ஓர் தன்னாட்சி கொண்ட நிர்வாகத்தை பலவருடங்களாக நடத்தியிருந்தார்களென்பதும் சரித்திரம்.

துரதிர்ஷ்டவசமாக சிங்கள ஆட்சியாளர்கள், தமது இராஜதந்திர நகர்வுகளினால், சர்வதேச நாடுகளில் ஆதரவுகளைப் பெற்று சர்வதேச வரையறைகள் சட்டங்களிற்கு முரணான மூர்க்கத்தனமான போர் மூலம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் தமிழரது ஆயு



தப் போராட்டத்தை வெற்றி கொண்டார்களென்பது தற்போதைய சரித்திரம்.

உலகில் ஆயுதப் போராட்டம் மூலம் வெற்றிகளைக் கண்ட எதியோப்பியா, கிழக்கு தீமோர், கோசாவா, தென் சூடான் வரிசையில் வீறு நடை போட்ட தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இன்று மௌனிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆயுதப் போராடடத்திற்கான விலையை மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த விடுதலைப் போராட்டமும் கொடுத்திருக்கவில்லை! இன சுத்திகரிப்பு, நில அபகரிப்பு, உயிர்ச் சேதங்கள், சொத்துச்சேதங்களென அடுக்கிக் கொண்டே போக முடியும்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட எந்தவோர் விடுதலைப்போராட்டத்திற்கும் இல்லாத ஓர் பாரிய புலம்பெயர்வாழ் சமூகத்தை தமிழீழ விடுதலை போராட்டம் மட்டுமே கொண்டிருந்தது .

இப்படி பாரிய எண்ணிக்கையில் புலம்பெயர் வாழ் தமிழர்கள் உலகம் பூராகவும் பரந்து வாழ்வது மட்டுமல்லாது, ஆயுதப் போராடடத்திற்கு உறுதுணையான காரியாலயங்கள், வர்த்தக நிறுவனங்கள் வேறுபட்ட நாடுகளின் அரசியல் கட்சிகளுடனான நெருங்கிய உறவுகளின் மத்தியில் ஈழத்தமிழர் அரசியல் இருப்பை இலங்கைத் தீவில் பறிகொடுத்து இன்று அநாதரவானவர்களாக காணப்படுவதற்கு புலம்பெயர் வாழ் சமூகத்தின் செயற்பாடுகளுமே காரணியாக அமைந்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

சகல வெற்றி தோல்விகளில் முக்கிய கர்த்தாவாக விளங்குவது பலம், பலவீனம் என்பதே. உளவியல் நிபுணர்கள், ஆய்வாளர்களின் கருத்துகளில் முரண்பாடுகள் காணப்பட்ட பொழுதிலும் ஓர் பொது உண்மை இத்தர்க்கங்களின் அடிப் படையில் வெளியாகின்றது.

இதைத் தான் "நம்பிக்கைத் துரோகம்" என்பார்கள். அதாவது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் காலப் பகுதிகளில் அதாவது 2005 , 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நம்பிக்கைத் துரோகம், காட்டிக்கொடுப்புக்கள் நிலத்திலும் புலத்திலும் ஆரம்பமாகி விட்டது.

(தொடரும்...)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜிகணேசனுக்கு பிரான்ஸ் நாட்டின் "செவாலியே" விருது

215

**பி**றகு பிரான்ஸ் நாட்டு தூதர் பிலிப் பெடிட், சிவாஜி கணேசனை பாராட்டிப் பேசினார்.

சிவாஜிகணேசன் சிம்மக் குரல் கொண்டவர். நடிப்புக்கு இலக்கணமாக திகழ்ந்து வருகிறார். அவருக்கு செவாலியே விருது கொடுத்ததில் பிரான்ஸ் அரசு பெருமை அடைகிறது என்று பிலிப் பொடிட் கூறிவிட்டு செவாலியே விருதுக்கான பதக்கத்தை சிவாஜியிடம் வழங்கினார். கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

### சிவாஜி சிலை

விழாவில் திரை உலகத்தினர் சார்பில் சிவாஜி கணேசனுக்கு 30 கிலோ எடையுள்ள வெள்ளியால் செய்யப்பட்ட வீர சிவாஜி சிலை வழங்கப்பட்டது. அதை முதலமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்.

தமிழ்த்திரை உலகத்தினர் மட்டுமன்றி ஹிந்தி, தெலுங்கு, மலையாள முன்னணி நடிகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

ஹிந்தி நடிகர் தேவ் ஆனந்த், தெலுங்கு நடிகர்கள் நாகேஸ்வரராவ், சிரஞ்சீவி, மலையாள நடிகர் மது, மம்மூட்டி, நடிகர்கள் ரஜனிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், கார்த்திக், அர்ஜுன், வி.கே.ராமசாமி, நாகேஷ், சிவகுமார், ராதாரவி, நெப்போலியன், நடிகைகள் சரோஜாதேவி, ஸ்ரீதேவி, மனோரமா, ராதிகா, டைரக்டர்கள் பாரதிராஜா, கே.பாக்கியராஜ், மணிரத்தினம், பி.வாசு, விசு உட்பட 32பேர் வாழ்த்திப் பேசினார்கள். சிவாஜியை புகழ்ந்து, இளையராஜா ஒருபாடலை எழுதி மேடையில் உணர்ச்சி பொங்க பாடினார்.

டைரக்டர் கே.பாலச்சந்தர், படஅதிபர்கள் ஏ.வி.எம். சரவணன், கே.ஆர்.ஜி. ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்தார்கள். நிகழ்ச்சியை நடிகை சுஹாசினி தொகுத்து வழங்கினார்.

சிவாஜிகணேசனை வாழ்த்தி முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகையில், சிவாஜிகணேசனுக்கு சிறந்த நடிகருக்கான பாரத் விருதை வழங்கத் தவறிய மத்திய அரசாங்கம் திரையுலகில் சிறந்த சாதனைக்காக வழங்கப்படும் தாதாசாகிப் பால்கே விருதை வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று கூறினார்.

### சிவாஜி தகவல்

செவாலியே விருது பெற்றது பற்றி பின்னர் சிவாஜிகணேசன் கூறியதாவது,



பிரான்ஸ் நாட்டில் வருடா வருடம் மிகச் சிறந்த நடிகருக்கு விருது கொடுப்பது வழக்கம். அதுதான் செவாலியே விருது.இது மிக உயர்ந்த விருது. 6 நீதிபதிகள் என்னுடைய 30 படங்களைப் பார்த்துவிட்டு எனக்குத்தான் அந்த விருதைக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து என்னைப்பற்றி முழு விபரங்களை சேகரிக்க புதுச்சேரி அரசுடன் தொடர்பு கொண்டார்கள்.

புதுச்சேரியில் உள்ளவர்களால் விபரங்களைச் சரியாகக் கொடுக்க முடியவில்லை. தட்டிக்கழித்து விட்டார்கள்.

அதன்பின் பிரான்ஸ் அரசு டில்லியுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

டில்லியில் என்னைப் பற்றிக் கூறுவதற்கு ஆள் இல்லை. அதனால் அவர்களும் கழட்டிவிட்டு விட்டார்கள்.

இந்த விடயம் எப்படியோ பிரான்சில் உள்ள இந்திய கலாசார மையத்திற்கு தெரிந்துள்ளது. அங்கே எனது இரண்டு நண்பர்கள் பஸ்கால், பாரீஸ் ஜமால் ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் பிரெஞ்சு அரசாங்க அதிகாரிகளை அணுகி தேவையான விபரங்களைத் தந்திருக்கிறார்கள். அதன்பின் பிரெஞ்சு அரசாங்கம் முறைப்படி எனக்குக் கடிதம் எழுதியது.

இவ்வாறு சிவாஜிகணேசன் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்...)

ஒரு நல்ல பழக்கத்தை விதைப்பதால் ஒரு நற்பண்பு அறுவடையாகும். நற்பண்பை விதைப்பதால் நல்விதி அறுவடையாகும். –ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# 3 முறை இயந்திரக்கோளாறுக்குள்ளான மாயமான ஏ.என்.32 இந்திய விமானம்

மாயமான இந்திய விமானம் மூன்று முறை சிறியளவிலான இயந்திரக் கோளாறுகளுக்குள்ளானது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

சென்னையை அடுத்த தாம்பரம் விமானப்படைத் தளத்தில் இருந்து போர்ட் பிளேருக்கு புறப்பட்டு சென்ற ஏ.என் 32 ரக சரக்கு விமானம் புறப்பட்ட 16 நிமிடங்களில் வங்காள விரிகுடா மீது பறந்து கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

29 பேருடன் புறப்பட்டுச் சென்ற விமானம் கடலில் விழுந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. விமானம் காணாமல் போனதையடுத்து, அதனைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விமானத்தை தேடும் பணியில் 20 கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.இ

விமானம் காணாமல் போனதையடுத்து பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் உள்ள ஐ.என்.எஸ். ராஜாளி விமானப்படை தளத்துக்கு நேற்று முன்தினம் வந்தார்.

விமானத்தை கண்டு பிடிப்பது குறித்து விமானப் படை, கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், அவர் 'பி-81' ரக கடற்படை ரோந்து விமானத்தில் சென்று விமானத்தை தேடும் பணியையும் பார்வையிட்டார்.

எந்தவித தடையும் இனறி விமானத்தை தேடும் பணியை தொடருமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் மனோகர் பாரிக்கர் உத்தரவிட்டார்.

விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் அருப் ராஹா, விமானப்படை பணியாளர் தலைவர் வைஸ் அட்மிரல் எச்.சி.எஸ்.பிஷ்த் உள்ளிட்டோரும் பாதுகாப்புத்துறை அமைச்சருடன் சேர்ந்து தேடும் பணியை பார்வையிட்டனர்.

விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல்கள், இந்திய விமானப்படையின் அதி நவீன கருவிகள் பொருத்தப்பட்ட சி-130 ரக விமானங்கள் இரண்டும் தொடர்ந்து தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

விமானம் மாயமாகி 36 மணி நேரம் ஆகிவிட்டது. இதுவரை என்ன ஆனது என்று தெரியவில்லை.

விமானம் கடலில் விழுந்தால் அதன் சிதறிய பாகங்கள் கடலில் மிதக்கும். அல்லது எண்ணெய் படலம் தெரியும். ஆனால், நேற்று முன்தினம் மாலை வரை சிதறிய பாகங்கள் எதுவும் கடலில் தென்படவில்லை. எண்ணெய் படலமும் காணபடவில்லை.

மாயமான அந்த விமானத்தை விமானிகள் பத்சாரா, நந்தா ஆகியோர் இயக்கி உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டியாக விமானி குணால், விமான பொறியாளர் ராஜன் மற்றும் 2 விமான ஊழியர்கள் இருந்தனர்.

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினம் கப்பல் படை ஊழியர்கள் சாம்பமூர்த்தி, பிரசாத் பாபு, நாகேந்திர ராவ், சேனாபதி, பூபேந்திர சிங், மகாரானா, சின்னா ராவ், சீனிவாச ராவ் ஆகிய 8 பேர் அந்த விமானத்தில் பயணம் செய்தது தெரிய வந்துள்ளது.

மாயமான இராணுவ விமானத்தில் தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி அருகே உள்ள செம்பூர் கிராமத்தை சேர்ந்த கடற்படை வீரர் முத்துக்கிருஷ்ணனும் (வயது 37) இருந்தார். அவருடைய கதி என்ன ஆனது என்று தெரியவில்லை.

மாயமான விமானத்தின் கடந்த கால டேட்டா ரஷ்யாவில் அண்டனோவ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஏ.என் 32 ரக விமானம் இரட்டை என்ஜீன்களை கொண்டது.

24 மீற்றர் நீளமும், சுமார் 30 மீற்றர் இறக்கை கொண்டது. 16 ஆயிரத்து 800 கிலோ எடை கொண்ட இந்த விமானத்தில் மொத்தம் 42 பேர் பயணிக்கலாம். 6.7 தொன் சரக்குகளை கொண்டு செல்லும் திறன் கொண்டது.

மணிக்கு 570 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்ட இதில் ஒரு முறை எரிபொருள் நிரப்பினால்4 மணிநேரம்தொடர்ந்து பறக்க முடியும். இந்த விமானம் மேலெழும்ப குறைந்த தொலைவு கொண்ட ஓடுதளமே போதுமானது.

இதற்கு முன் 3 முறை இந்த விமானத்தில் சிறிய அளவிலான கோளாறுகள் ஏற்பட்டு, பின்னர் சரி செய்யப்பட்டுள்ளதும் தற்போது தெரியவந்துள்ளது.

மாயமான இந்த விமானத்தை தேடும் பணி முழு வீச்சில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# தென்பகுதிப் பெற்றோர்களுக்கு வடக்கிலிருந்து ஓர் அன்புமடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களின் பெற்றோர்களுக்கு அன்பு வணக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிக்கின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சில பீடங்கள் தமது கற்றல் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் சிங்கள மாணவர்களின் பெற்றோர்கள் ஒன்று கூடி தமது பிள்ளைகளுக்கான பாதுகாப்பை பொலிஸார் அல்லது இராணுவம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து,

அது தொடர்பான கடிதங்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதான செய்திகள் வெளிவந்துள்ளன.

இச் செய்தியானது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டிற்கான காரணத்தை சிங்கள மாணவர்களின் பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லை என்பதும் அவர்களுக்கு வேறுவிதமாக நிலைமை சொல்லப்பட்டுள்ளது என்பதையும் உணர முடிகிறது.

உண்மையில் நிகழ்ச்சி நிரலில் இல்லாத கண்டிய நடனத்தை வரவேற்பு ஊர்வலத்தில் வேண்டுமென்றே புகுத்தியதனாலேயே மாணவர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் கண்டிய நடனத்தை புகுத்தவேண்டும் என்பது ஒரு திட்டமிட்டசதி வேலை. இந்தச் சதிவேலை யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் அனைத்து சிங்கள மாணவர்களுக்கும் தெரியாமல் இருந்திருந்தாலும் குறிப்பிட்ட சிங்களமாணவர்களே அதை நின்று நெறிப்படுத்தியுள்ளனர். இதன் பின்னணியில் வேறு சக்திகளும் இருந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவந்த சிங்கள மாணவர்களை பயன்படுத்தி ஒரு குழப்பத்தை ஏற்படுத்த பேரினவாத சக்திகள் முயற்சிக்கின்றன என்ற உண்மையை சிங்கள மாணவர்களின் பெற்றோர்களாகிய நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

இப் போது இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ் – சிங்கள் மாணவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த ஒற்றுமையை நாம் இப்போது ஏற்படுத்தா விட்டால்எந்தக்காலத்திலும்தமிழ்–சிங்களமாணவர்களுக்கிடையிலான ஒற்றுமை ஏற்பட வாய்ப் பின்றிபோகும்.

இந்த நிலைமை மாணவர்களிடையே அடிக்கடி மோதல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தலாம். உங்கள் பிள்ளைகளுக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்குங்கள் என்று நீங்கள் கேட்பதானது நிலைமையை மிக மோசமாக்கும் என்பதுடன் இத்தகைய கோரிக்கைகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை இயங்காமல் செய்யும்.

ஆகையால் சிங்கள மாணவர்களின் பெற்றோர்களாகிய நீங்களும் தமிழ் மாணவர்களின் பெற்றோர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்பட்டு கதைத்துப் பேசுவது நல்லது.

இவை சுமுகமான நிலைமையை குழப்ப நினைக்கும் தீய சக்திகள் பற்றி நீங்கள் அறிந்து கொள்வதற்குப் பேருதவியாக இருப்பதுடன் தமிழ் – சிங்கள – முஸ்லிம் பெற்றோர்களின் ஒற்றுமை, மாணவர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தும்.

ஆதலால் யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் தமிழ் – சிங்கள – முஸ்லிம் மாணவர்களின் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து செயற்படுவது இன ஒற்றுமைக்கு பெரு வாய்ப்பைக் கொடுக்கும் என நம்பலாம்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கி ஈராக்கில் 12 பேர் உடல் சிதறிப் பலி

## 20 பேர் படுகாயம்

ஈராக்கின் தலைநகரான பாக்தாத் நகரின் வடக்கு பகுதியில் நேற்று தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 12 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

வடக்கு பகுதியில் ஒரு நுழைவு வாயிலில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை வெடிகுண்டுத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

சியட்டி மாவட்டத்தில் உள்ள கதிமியாவில் ஒரு நுழைவாயிலில் நேற்றுக் காலை ஒரு தீவிரவாதி தன் உடலில் கட்டிக்கொண்டு வந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளான்.

இதில் 8 இராணுவ வீரர்கள், 2 பொலிஸார் உட்பட 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதுவரை எந்த தீவிரவாத அமைப்புகளும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு இந்த தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. (இ-5)

# மது, புகைத்தல் பழக்கமில்லாத தலைவர்களை நாடு பெற்றுள்ளது

எமது நாடு மது, புகைத்தல் என்பவற்றிலிருந்து விலகியுள்ள ஜனாதிபதியையும் பிரதமரையும் கொண்டிருப்பது பெரும் பாக்கியமாகும் என கோட்டே ஸ்ரீகல்யாணி சாம க்ரி தர்ம சபையின் மகாநாயக்கர் கலாநிதி இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் தெரிவித்தார்.

இலங்கை மது ஒழிப்புச் சபையின் 104 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம்போதைக்கு முற்றுப்புள்ளி என்ற நிகழ்சசித் திட்டத்தை முன்னெடுத்தது. இதற்காக பல கோடி ரூபாயை செலவு செய்தது. ஆனால், பிரதிபலன் என்னவென கேட்கவேண்டியுள்ளது.

இதனைக் கூறும் போது சிலருக்கு கஷ்டமான தாக இருக்கும் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்திில உசன், விடத்தற் பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஒழித்தல்



தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொண்டுள்ளது கவலை. மனம் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடியாமல் போனால், பிரச்சினைகளை முடிக்க முடியவில்லை எனில், அந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாவிட்டால் கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது. தேவைக்கும், இருப்புக்கும் இடையே இடைவெளி, எதிர்பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே இடைவெளி, தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம். இவை யாவும் கவலைக்கு வித்தாகின்றன. மனதைக் கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன், முறையான திட்டத்துடன் செயற்பட்டால் இவை அனைத்தையும் சரி செய்ய முடியும்.

ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவ்து பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தோன்றும். அவை வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கும். பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. வாழ்க்கையின் ஒரு பகுதி தான் பிரச்சினை. கடந்த காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை எண்ணிப் பாருங்கள். அதே போன்று தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினையும் காலத்தில் அவ்வாறே தீர்க்கப்பட்டு விடும்.

பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டுத் தைரியமாக அவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டுவிடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்து விடும். இங்கு இயறகைச் சட்டத்தை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தான் எந்த ஒரு பிரச்சினையும் பெரியதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்துவிடும். இதற்கென நாம் ஓர் வழி முறையை ஏற்படுத்திக் கொண்டு சரியாக அதைக் கடைப்பிடித்து வந்தால் அனைத்து பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு பெற்று விடலாம். அதனால், மனதின் சுமையும் நீங்கிவிடும்.

# இன்றைய போட்டிகள்

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

>>>>>

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நாவலர் கிரிக்கெட் தொடர்

# வல்வை அணியை வீழ்த்தியது மாலுசந்தி மைக்கல் அணி



பருத்தித்துறை நாவலர் கிரிக்கெட் தொடரில் வல்வை அணியை வீழ்த்தி மாலு சந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

அச்சுதன், ரகுவரன் ஆகியோரின் துடுப்பாட்டம் தர்சன், தினேஷ் ஆகியோரின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் மாலுசந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரின் காலிறுதி, அரையிறுதிப்போட்டிகள் அண்மையில் மாதனை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன. பரபரப்பான காலிறுதிப்போட்டியில் கரவெட்டி ஐங்கரா அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 10 ஓவர்களில் 83 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அச்சுதன் 35, ரகுவரன் 12, தினேஷ் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐங்கரா அணி 78 ஓட்டங்களைப்பெற்றது. மைக்கல் அணி பந்துவீச்சு சார்பாக தர்சன், அனோஜன், தினேஷ் தலா 2 , வினோத் ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர். இறுதியில் மைக்கல் அணி 5 ஓட்டங்களினால் வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் வல்வை அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 10 ஓவர் களில் 52 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரகுவரன்-20 ஓட்டத்தை பெற் றார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வை அணி இறுதிவரை போராடி 4 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. மைக்கல் அணி பந்து வீச்சு சார்பாக தர்சன், அனோஜன், வினோத் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இறுதியில் 4 ஓட்டங்களினால் வெற்றி பெற்று மாலு சந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

போட்டியில் முக்கிய வீரர்கள் கலந்துகொள்ள முடியவில்லை. இந்தச் சூழ்நிலையிலும் ரகுவரன், தர்சன், அச்சுதன், வினோத் ஆகியோர் சிறப்பாக அணியை வழிநடத்தி இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இந்தவருடம் மைக்கல் அணி எதிர்கொள்ளும் மூன்றாவது இறுதிப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# J.P.L. வெற்றிக்கிண்ணம் - 2016

# ஸ்கந்தாஸ்ரார் முதலாவது வெற்றி

J.P.L வெற்றிக்கிண்ணத்திற்கான யு.ஆர்.பிரண்ட் பவுண்டேசன் 4 ஆவது வருடமாக நடத்தி வரும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்றின் 9 ஆவது போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணி, மானிப்பாய் பரீஸ் அணியை 2 இலக் குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய் துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப்பெற்றனர். நிதர்சன்-18, கோபிரசாத்-12, சஜீத்-82, ஜெயதீபன்- 23 ஓட்டங்களைப்பெற்றனர். பந்துவீச்சில் விஷ்ணு பிரகாஸ் -1, துபிசன்-3, சிந்துஜன்-02 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியஸ்கந்தாஸ்ரார் அணி 19.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றனர்.

கஜீவன்-10, கதியோன்-53, துபிஸன்-22, சயந்தன்-17 , சிந்துஜன் ஆட்டமிழக்காது -16, நிரோஜன்-21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிசோ-02, சபாஸ்-03, யாழினியான்-02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணியை சார்ந்த கதியோன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு ஸ்கந்தாஸ்ரார் அணி 4.50 புள்ளிகளையும் மானிப்பாய் பரீஸ் அணி 2.37 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (கு)

# மோகனதாஸ் வி.கழக கரப்பந்தாட்ட முடிபுகள்

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் B பிரிவினருக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற முதலாவது காலிறுதிப்போட்டியில் புத்தூர்கலைமதி B அணியை மல்லாகம் நியூ வாரியர்ஸ் அணி 2:1 (14:25, 25:19, 25:22) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் நீர்வேலி காமாட்சி அணியை தோப்பு வாலிபர் 2:0(25:19,25:14) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் வடக்கம்பரை அம்பாள் அணியை ஆவரங்கால் இந்து இளைஞர் B அணி 2:0 (25:18, 25:21) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

புத்தூர் தமிழ்மதி அணிக்கு எதிரான போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணி 2:0(25:16, 25:13) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

நடைபெற்ற மற்றைய போட்டியில் புத்தூர் சரஸ்வதி அணியை மல்லாகம் நியூவாரியஸ் அணி 2:0 (25:21, 25:19) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (கு)

# அம்பாள் வி.கழகம் நடத்தும் ஹொக்கி சுற்றுப்போட்டி

## ஜூனியன், ஓல்ட் கோல்ஸ் வெற்றி



அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஹொக்கிப்போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் முதலாவது விறுவிறுப்பான ஆட்டத்தில் ஜூனியன் கல்லூரியும் நியூ வாரியஸ் அணியும் மோதின.

ஒதுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் பெற்றன. பின்னர் நடைபெற்ற பனால்டி உதையில் ஜூனியன் கல்லூரி வெற்றி பெற்றது. அடுத்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் ஓல்ட் கோல்ஸ் அணியும் ஜூனியன்ஸ் அணியும் மோதின. அனல் பறந்த ஆக்ரோசமான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 3 கோல்கள் பெற்றன. பின்பு நடைபெற்ற பனால்டி உதையில் ஓல்ட் கோல்ஸ் வெற்றி பெற்றது. (கு)

# றொக்கெட்டை வீழ்த்தியது முரசொலி அணி



அச்சுவேலி வெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் தொடரில் அண்மையில் இடம்பெற்ற லீக் சுற்றில் முரசொலி அணி றொக்கெட் அணியை எதிர்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய முரசொலி அணி 5 விக்கெட் இழப்பிற்கு 97 ஓட்டங்கள் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றொக்கெட் அணி 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 90 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. (கு)

## ஞானமுருகன் வெற்றி

புத்தூர் எவரெஸ்ட் வி.க. நடத்தி வரும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் வரிசையில் சுப்பர் 8 போட்டிகள் அண்மையில் ஆரம்பமாகின. முதல் நாள் போட்டியில் உரும்பிராய் திருக்குமரன் கழகத்தை 0:4 என்ற ரீதியில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம். (கு)

# காணி உரிமை, சம்பள அதிகரிப்பு கோரி நேற்று பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை மாத்தளை நகரில் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு, காணி உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாத்தளை மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பெருந் தோட்டத் தொழிலாளர்களும், குடியிருப்பாளர்களும், சமூக ஆர்வலர்களும் என பெரும் எண்ணிக்கையிலானோர் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 620 ரூபாய் நாள் சம்பளமாக வழங்கப்படுகிறது. இந்த தொகை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும் என போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் வலியுறுத்தி குரல் எழுப்பினார்கள்.

விலைவாசி உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவுகளை கருத்தில் கொண்டு, அரசு மற்றும் தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு கிடைக்கிறது.

ஆனால், தங்களுக்கு சம்பள உயர்வு மறுக்கப்படுவதாக போராட்டத்திற்கு ஏற்பாடு செய்த சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு கூறுகின்றது.

சமூக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் காணி உரிமையை வலியுறுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஒரு இலட்சம் கையொப்பங்களை திரட்டும் வேலைத் திட்டமொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெருந்தோட்ட குடியிருப்பாளர்களுக்கு குடியிருப்புக்காக 20 பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும். வாழ்வாதாரத்திற்காக ஒரு ஹெக்டர் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். பெருந் தோட்டம் என்பதற்கு பதிலாக கிராமம் என அழைக்கப்பட வேண்டும்.

பெருந் தோட்ட காணி விவகாரங்களை கையாள தனி ஆணையாளரொருவர் நியமிக்கப்பட வேண்டும் ஆகிய நான்கு விடயங்களை உள்ளடக்கிய மனுவொன்றிலே இந்த கையொப்பங்கள் திரட்டப்படுகின்றன.

இந்த மனுவை வரும் ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கும் வகையில், இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பெருந்தோட்ட சமூக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் இணைப்பாளரான எஸ்.டி. கணேசலிங்கம் ஊடகங்களிடம் தெரிவித்தார். (செ)

# கபட நோக்க அபிவிருத்திகளை நாம் முழுமையாக எதிர்ப்போம்

## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது பகுதிகளில் கபட நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை நாம் முழுமையாக எதிர்ப்போம் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் மீன்பிடி இறங்குதுறை அமைப்பதை உடனடியாக நிறுத்தக்கோரி இந்து சமய அமைப்புக்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒன்றிணைந்து கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றலில் நேற்றையதினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கீரிமலைப்பகுதியில் இந்த இறங்குதுறையை அமைப்பதன் மூலம் மீன்பிடித் துறையை பொறுத்தமட்டில் அதன் பயன்பாடு மிக குறைவாகவே இருக்கும் ஏனெனில் தையிட்டி, மயிலிட்டி ஆகிய இடங்களில் தான் மீன்படி துறைமுகங்கள் அமைக்க வேண்டும. அங்குதான் மீன்பிடித்துறையை தொழிலாக கொண்டவர்கள் பலர் வாழ்ந்துள்ளார்கள்.

அப்பகுதி மக்களின் மீள்குடியேற்றத்தை தட்டிக்கழிப்பதற்காக கபட நோக்கத்துடன் இவ்வாறான இறங்குதுறைகளை அமைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதை பார்க்கக் கூடியதாகவுள்ளது.

அதன்படி இங்கு மீன்பிடி இறங்குதுறையை கட்டி விட்டு அதில் இறங்குதுறை இருக்கிறது தானே என கூறி தையிட்டி அல்லது மயிலிட்டியில் கட்ட வேண்டிய பெரிய துறைமுகத்தை இல்லாமல் செய்ய வேண்டிய கபட நோக்கம் இருப்பதாகவே தெரிகிறது. ஆகவே இதை நாம் அனைவரும் எதிர்க்கிறோம்.

அபிவிருத்தி என்ற ரீதியில் எங்கு அபிவிருத்திகள் நடைபெற்றாலும் அதை நாம் வரவேற்கிறோம். ஆனால் கபட நோக்கத்தில் கட்டப்படும் இறங்குதுறை என்பதால் அதை நாம் முழுமையாக எதிர்க்கிறோம்.

இந்த மீன்பிடி இறங்குதுறையை மாதகல் பகுதிகளில் கட்டியிருந்தால் பயனுள்ளதாக அமைந்திருக்கும். இது எமது சமூகத்துக்கு போட்டியாக செய்யப்படுகிறது.

மயிலிட்டி பகுதியில் துறைமுகத்தை அமைத்து அங்குள்ள மக்களை குடியமர்த்துவது தான் முக்கியமான விடயம். அவ்வாறான பிரச்சினைகளை திசை திருப்புவதற்காக தான் இவற்றை உருவாக்குகிறார்கள்.

எது எவ்வாறாக நடைபெற்றாலும் எமது அடிப்படை நோக்கங்களை கைவிடாது மக்களை குடியமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# பேருந்து கட்டண அதிகரிப்பு

## மதிப்பீடுகளை செப்ரெம்பரிலேயே வெளியிட முடியும் - கெமுனு

(கொழும்பு)

தனியார் பேருந்து கட்டண அதிகரிப்பு குறித்து சரியான மதிப்பீடுகளை செப்ரெம்பர் மாதத்தில் வெளியிட முடியும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே நேற்று அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பேருந்து கட்டண அதிகரிப்பு அமுலபடுத்தப்பட உள்ளது. எனினும், இந்த கட்டண அதிகரிப்பின் அனுகூலம் அல்லது பிரதிகூலம் பற்றிய சரியான மதிப்பீடுகளை ஓக்ஸ்ட் மாதத்தில் வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவதனால் இந்தகாலப்பகுதியில் பேருந்துகளின் வருமானம் வழமையாகவே கணிசமான அளவு குறைவடையும் எனவே,

கட்டண அதிகரிப்பினால் கிடைக்கும் இலாபத்தை சரியான முறையில் செப்டெம்பர் மாதத்திலேயே கணிப்பீடு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

# மக்களுக்கான அபிவிருத்தியையே அரசாங்கம் முன்னெடுக்கும் - மங்கள

(கொழும்பு)

மக்கள் நலனை முன்னிலைப் படுத்தியே அபிவிருத்தித்திட்டங் கள் முன்னெடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தமது தேர்தல் தொகுதியான மாத்தறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பொதுமக்களுக்கு நன்மை அளிக்காத எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் நல்லாட்சி அரசாங்கம் மேற்கொள்ளாது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற மக்களுக்கு நன்மையளிக்காத அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லை.

கட்சி, இன, மத மற்றும் மொழி பேதங்களை கடந்ததே வறுமையாகும்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டை மக்கள் உணர்ந்தறிந்து கொள்ளக்கூடிய வகையிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதே இந்த அரசாங்கத்தின் இலக்காக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (செ)

# நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக...

நேற்று முற்பகல் வரக்காபொல நகர மண்டபத்தில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னிலைத் தல்லவரும் முன்னாள் அமைச்சருமான சட்டத்தரணி தர்மசிறி சேனாநாயக்கவின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2015 ஜனவரி 8ஆம் திகதி இந்நாட்டின் 62 இலட்சம் மக்கள் தம் மீது நம்பிக்கை வைத்து இந்நாட்டை பொறுப்பளித்ததாகவும் அப்பொறுப்பை நிறைவேற்றும் போது முன்நோக்கி பயணிப்பேனன்றி ஒருபோதும் பின்நோக்கி பயணிக்கமாட்டேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, எல்லோருடனும் இணைந்து நாட்டுக்கு பொருத்தமான ஒரு அரசியல் யாப்பை தயாரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

எனினும் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கும் குழுவில் உள்ளவர்களே புதிய அரசியல் யாப்பு தொடர்பாக நெருக்கடியான விமர்சனங்களை முன்வைத்து வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து புதிய ஒரு யாப்பின் தேவையை முதன்முதலில் சுட்டிக்காட்டியவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் தலைமையிலான சுதந்திரக் கட்சியாகும் என்றும் அதன் பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்க அம்மையாரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் இரண்டி லும் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் இரண்டிலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் புதிய யாப்புக்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் எனத் தமக்குத் தெரியாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேசத்தை வெற்றி கொள்கின்ற போது நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற போதும் தாம் அன்று பண்டாரநாயக்கவின் அரசியல் தத்துவத்தில் இருந்த வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையிலேயே செயற்படுவதாகவும் அது தவிர உலகின் எந்தவொரு நாட்டுடனும் வேறு வெளிக்கடப்பாடுகள் தமக்குக் இல்லையென்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி,

தாம் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை கோட்பாடுகளை பாதுகாக்கும் வகையிலேயே நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்ததுடன் இன்று நல்லாட்சி அரசாங்கத்தில் எல்லோரும் ஒன்றிணைந்து நாட்டுக்குத் தேவையான மாற்றத்திற்கு அஉப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனநாயகவாதியும் மறைந்த அரசியல்வாதியுமான தர்மசிறி சேனாநாயக்க போன்றவர்களின் முன்னுதாரணமான செயற்பாடு இன்றைய அரசியல்வாதிகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகும் எனக குறிப்பிட்ட ஜனாதிபதி, ஊழல் மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம் அவரிடத்தல் சிறிதளவேனும் இருக்க வில்லை என்றும் குறிப்பிட்டார். (செ)

# பொலிஸ், வைத்தியரின் கவன...

யர் அங்கு இருக்கவில்லை. 23 ஆம் திகதி காலை 8 மணியளவிலேயே வைத்தியர் சென்று பார்வையிட்டுள்ளார் என்றும் இதன் போது காயமடைந்த குடும்பஸ்தர் மயங்கிய நிலையிலேயே காணப்பட்டார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலைககு மாற்றப்பட்ட நிலையில் நேற்று காலை 7 மணியளவில் பிரஸ்தாப குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணத்திற்கான காரணம் தலையில் பலமாக அடிபட்டு மூலையில் பாதிப்பு ஏற்பட்டமையே என தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தால் உரிய சிகிச்சை அளித்திருக்க முடியும் எனவும் உறவினர்கள் மரண விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறு உயிரிழந்தவரின் மரணம் தொடர்பில் நேற்றைய தினம் விசாரணை மேற்கொண்ட பொலிசாரிடம் விபத்தை நேரில் கண்டவர் வாக்குமூலத்தை வழங்க முன்வந்த போதிலும், அவரது வாக்குமூலத்தை ஏற்காமல் கண்காணாத வேறொருவரின் வாக்குமூலத்தையே பதிநதுள்ளதனால் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உறவினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மரண விசாரணைய்ை யாழ் போதனாவைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி என்.பிரேம்குமார் மேற்கொண்டிருந்ததுடன் சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-4,9)

## மினிபஸ்-மோ.சைக்கிள்...

ஏ9 வீதி முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் சிறியர்க மினிபஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மேற்படி தம்பதியினரின் இரண்டு வயது குழந்தையான லெனாட் ஆசாட் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் வவுனியா குட்செட் வீதியை சேர்ந்த இளம் தம்பதியரான அல்பிறட் ஜெயக்குமார் லெனாட் (வயது 24) மற்றும் அவரது மனைவி பிரசாந்தினி லெனாட் (வயது 23) ஆகியோராவர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று வவுனியா நோக்கி திரும்பி கொண்டிருந்த குடும்பத்தினர் மீது மாங்குளம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மினிபஸ் மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கணவன் மனைவி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளதுடன் குழந்தை தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றது.

மினி பஸ்ஸின் சாரதி நித்திரை கொண்டதன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாக மாங்குளம் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மினிபஸ் சாரதி தப்பியோடிய நிலையில், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் விபத்தில் உயிரிழந்த, கணவன மற்றும் மனைவியின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய மினிபஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகிலுள்ள பற்றைக் காட்டினுள் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-15,281,312)

## கீரிமலை கண்டகி...

கீரிமலை கண்டகி தீர்த்தக்கரையில் மீன்பிடி இறங்குதுறை அமைப்பதை உடனடியாக நிறுத்தக்கோரி இந்து சமய அமைப்புக்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒன்றிணைந்து கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றலில் நேற்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இந்துக்களினதும் தமிழர்களினதும் புண்ணிய பூமியாக விளங்குகின்ற கீரிமலை கண்டகி தீர்த்தக்கரையில் இலங்கை கடற்படையினரால் மீன்பிடி இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு இறங்குதுறை அமைக்கப்பட்டு தொழிற்படுமாயின் கீரிமலை கடற்கரையில் இடம்பெறுகின்ற அனைத்து புண்ணிய காரியங்களும் மாசுபடும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும்.

அதாவது கண்டகி தீர்த்த கரையில் இடம்பெறும் மகாசிவராத்திரி தீர்த்தம், ஆடி அமாவாசை தீர்த்தம் மற்றும் நாளாந்தம் பெருமளவு மக்கள் தமது இறந்தவர்களின் ஆத்ம சாந்தி நிகழ்வுகளான அந்தியேட்டி மற்றும் பிதிர்கடன் நிகழ்வுகள் என்பன இறங்குதுறையின் செயற்பாட்டினால் மாசுபடும் சூழ்நிலை உருவாகும்.

ஆகவே உடனடியாக இறங்குதுறை அமைப்பதை நிறுத்தி சைவத் தமிழ் மக்களின் புனித பிரதேசத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்ததோடு

இது தொடர்பாக எமது எதிர்ப்பை இவ்வாறு ஒரு சிறு போராட்டம் ஊடாக வெளிப்படுத்துகிறோம்.

எனினும் இறங்குதுறை அமைப்பதை உடனடியாக நிறுத்தாவிடின் பெருமளவான மக்கள் ஒன்று திரண்டு போராட வேண்டிய நிலை ஏற்படும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபொது மக்கள் எச்சரித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பவர் வருகை தந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்குறித்த விடயம் தொடர்பாக மகஜர் ஒன்றினை அவரிடம் கையளித்திருந்தனர்.

அதனை பெற்றுக்கொண்ட் அவர் நியாயமான முறையில் இந்த பிரச்சினை தீர்த்து வைக்கப்படும். அது வரை அமைதியாக இருக்கும்படி தெரிவித்ததுடன் போராட்டத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைய அவ் இடத்தை விட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (செ-9)

## ஜென்மம் முடியும்...

ஒருபோதும் வீட்டுக்கு வந்து அடையாள அட்டைகளை பறித்து செல்லவில்லை. களுத்துறை மாவட்டத்தில் உள்ளவர்கள் இதனை நன்கு அறிவார்கள்.

பொது சொத்துக்களை சேதமாக்கவில்லை. நீதிமன்றத்திற்கு தீவைத்ததில்லை. ஒருபோதும் மின்மாற்றியை வெடிக்க செய்ததில்லை. கால்வாய் எதனையும் உடைத்ததில்லை.

எப்போதும் நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை கொன்று முழங்காலுக்கு கீழ் புதையுங்கள் என்று கட்டளையிடவில்லை என பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

1988-1989 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்செயல்களின் போது, ஜே.வி.பியினர் மேற்கொண்ட வன்முறைகள் தொடர்பாக பந்துல குணவர்தன இவ்வாறு ஏளனமாக பேசியுள்ளார். (செ)

## ஊழல்வாதிகளை...

முன்னெடுப்பது நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் பழிவாங்க சென்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள அமைச்சர்கள் கூக்குரலிடுவார்கள். அதேபோல் எமது உறுப்பினர்களை பழிவாங்கினால் நாங்கள் கூக்குரலிடுவோம் என்றும் தெரிவித்துள்ள பிரதமர்,

மக்கள் விடுதலை முன்னணியை பழிவாங்க நினைத்தால் அவர்கள் பாராளுமன்றில் கூக்குரலிடுவார்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே யாரையும் பழிவாங்குவது எமது நோக்கமல்ல என்றும் நல்லாட்சியில் யாரையும் பழிவாங்கவும் முடியாதென்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் பழிவாங்கல் நடப்பதாக அர்சாங்கத்தின் மீது குற்றம் சுமத்தும் நபர்கள் தொடர்பில் தாம் கவலையடையப் போவதில்லை என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (செ)

## 617 ஏக்கர்...

படி காணி கடற்படையினருக்காக முறைப்படி சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் காணிக்கான நட்டஈட்டினை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்ட நிலையில்,

எமக்கு எமது நிலம்தான் வேண்டும். எமது காணிகளிலிருந்து கடற்படையினரை வெளியேற்றுங்கள். நட்டஈட்டினை ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டோம் என முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது மண் அரண் அமைக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். இவ் 617 ஏக்கர் காணிக்குள் 06 ஏக்கர் காணிக்கு உரிமையாளரான வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனிடம் இது தொடர்பாகக் கேட்டபோது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்களின் சுவீகரிக்கப்பட காணிக்கு இழப்பீட்டினை பெற்றுக்கொள்ளுங்கள் என எம்மிடம் வலியுறுத்தப்பட்டது. நாம் இழப்பீட்டினை மறுத்திருந்தோம். எமது காணியே வேண்டுமென்றும் தெரிவித்திருந்தோம். தற்போது கடற்படை அமைக்கும் மண் அரணைப் பார்க்கும் போது கடற்படை காணியினை அடாத்தாக சுவீகரித்து விட்டதென்பதையே வெளிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்தார்.

மேற்படி காணியினை சுவீகரித்துள்ள கடற்படையினர் கோத்தபாய கடற்படைத் தளம் எனும் பெயரில் விஸ்தரித்துள்ளதுடன் உலங்கு வானூர்திகள் இறங்கி ஏறக்கூடிய வகையிலும் தளத்தினைப் பலப்படுத்தி வருவதாகவும் அறிவதாக காணியினை இழந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் கிழக்கில் வயல்நிலங்கள், கிணறுகள் மற்றும் வீடுகளுடன் பெறுமதியான பல காணிகள் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.(செ-281)

## பயங்கரவாத...

கத்தை கட்டியெழுப்பவோ, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவோ முடியாது போய்விடும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை தமிழ், சிங்கள மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவமானது திட்டமிட்டு நடத்தப்பட்டதொன்று. தமிழ் மாணவர்களுக்கு எதிரான தென்பகுதியில் உள்ள ஒருசில இனவாதிகள் அந்த மோதலுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இராணுவம் உட்பட யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள ஆயுதப்படைகளுக்கும் இந்த சம்பவத்துடன் தொடர்புகள் உள்ளன.

இதனால் இந்த சம்பவத்துக்கான உண்மை கண்டறியப்பட வேண்டியது அவசியம். இதனை பக்கச்சார்பின்றி மேற்கொள்ள வேண்டும். அதேவேளை தமிழ் மாணவர்கள் தீவிரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என குற்றம்சாட்டி, அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஆரம்ப புள்ளியாக விஞ்ஞானபீட மோதலை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதனால் அரசாங்கம் இந்த சம்பவம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்து சதி நடவடிக்கைக்கு காரண்மானவர்களை கண்டறிய வேண்டும்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தென்பகுதி இனவாதிகளை கண்டறிய வேண்டும். எந்தவொரு நிலையிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெறக் கூடாது. ஏற்கெனவே பயங்கரவாத தடைச்சட்டத்தினால் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர். அந்த பயங்கரமான சட்டத்தை நீக்குவதில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது.

இந்த சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும், 160ற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றனர். தற்போதைய சூழ்நிலையிலும் யாழ்ப்பாணத்தில் பலர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவது தொடர்கிறது. அதனால் யாழ்.பல்கலைக்கழக சம்பவத்தையும் ஒரு பயங்கரவாத செயற்பாடாக பார்க்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு பார்க்கப்பட்டால் அது பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கும் எனவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ)

## பொலிஸ், வைத்தி...

புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ஓர் இடத்திற்கு சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தர் பின்னர் இணுவில் தியேட்டர் ஒழுங்கையில் உள்ள தனது வீட்டை நோக்கி சென்றுள்ளார்.

இவ்வாறு செல்லும் போது, வீதியில் உள்ள மஞ்சள் கோடு வழியாகவே தனது துவிச்சக்கர வண்டியை உருட்டிக்கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது மருதனார்மடத்திலிருந்து உரும்பிராய் நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் குறித்த குடும்பஸ்தரை மஞ்சள் கோட்டில் வைத்தே மோதியுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் காயமடைந்த குடும்பஸ்தரை தனியார் மருத்துவமனையில் மருந்து கட்டிவிட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வருமாறு விபத்தை ஏற்படுத்தியவரிடம் கூறியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அங்கு நின்றவர்களால் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு கூறப்பட்டுள்ளது. இந்த இழுபறியால் நேரம் தாழ்த்தியே விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இரவு 7 மணியளவில் அவருக்கு மருந்து கட்டப்பட்டுள்ளது. அப்போது வைத்தி

23ஆம் பக்கம் பார்க்க....

வீடு விற்பனைக்கு

நீர்வேலி அத்தியார் பாடசாலையில் இருந்து பருத்தித்துறை வீதி நோக்கிய பாதையில் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் 50M தூரத்தில் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்ட 2 1/2 காணியுடன் வீடு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு :
077 4323 200

## கூட்டு எதிரணி...

இதற்காக கூட்டு எதிர்க்கட்சியினருக்கு ஜனாதிபதி செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஜொன்ஸ்டன் பெர்ணாந்தோ ஆகியோருக்கு இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், நாமல் ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கு அழைப்பிதழ் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிய வந்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இன்று நடைபெற உள்ள சந்திப்பில், அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினரால் மேற்கொள்ளப்படுகின்ற நடைபவனி தொடர்பிலும் பேசப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது. (செ)

## எரிபொருள் இறக்கும்...

நேற்றுமுன்தினம் மீண்டும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்தே எரிபொருள் இறக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தரக்குறைவான எண்ணெய் குழாய் கொண்டு வரப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக லங்கா மசகு எண்ணெய் தேசிய ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

எரிபொருள் இறக்கும் நடவடிக்கைகள் தாமதமானால் கப்பலுக்காக நாள் ஒன்றுக்கு பாரியளவில் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வெடிப்பு இடம்பெற்ற குழாயினது சீரமைப்பு பணிகளை விரைவில நிறைவு செய்ய முடியும் என அதன் தலைவர் டி.ஜி ஜயசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## யாழ்.பல்கலையின்...

பாடுகளும் இன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுதவிர கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவ வணிக பீடத்தின் ஏனைய கல்விச் செயற்பாடுகள் மற்றும் விஞ்ஞான பீடத்தை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்தும் இடம்பெறுவதாக அவர் கூறினார். (செ-4)

பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு
(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு
வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி
O/L உடன் Business & Hotel Management
UK Certified
CERTIFICATE ➡ DIPLOMA ➡ DEGREE
With FREE English Course
2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
(C-5289)
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.